# தென்றல்


ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 09 சுகந்தம் : 34 (ஆடி - புரட்டாதி) 2017





கவிஞர் நிலாதமிழின்தாசன்

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!



மின் தடைப்பட்டாலும் குளிர்ச்சியை தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள LG பவர்கட் குளிரூட்டி
LG
Life's Good
7
மின் தடையேற்பட்டாலும்
மணித்தியாலங்கள்
தடையின்றி குளிர்ச்சியாய் வைத்திருக்கும்
மின் தடையானாலும்
எவர்கூல்
புதிய அறிமுகம்
AD/020
(நிபந்தனைகளுக்குட்பட்டது. முன்னறிவித்தல்களின்றி விலைகள் மாற்றப்படலாம்.
இங்கு காட்டப்பட்டுள்ள உருக்கள் நிஜத்திலும் வேறுபடலாம்.)
தொடர்புகளுக்கு....
அபான்ஸ் காட்சியறை, 263, 265, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 065-2227895
Abans

ஆரம்பம் : 06. 04. 2008

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542

Email:- kirupabatticaloa@yahoo.com

இணையம் :- www.thendralbook.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி. கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்
செல்வி. த.செல்வராணி

**ஓவியம்**
வே. ஹோகுலரமணன்

**கணனி வடிவமைப்பு**
யோ. மிருனாளினி

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)

## வேந்தருக்குக் கௌரவம்!!!

கிழக்கிலங்கையில் நீர் வளமும், நில வளமும் ஒருங்கே அமையப் பெற்ற திருப்பழுகாமத் திருப்பதியில் அவதரித்து, ஊரின் பெருமையை நாடறிய – உலகறியச் செய்த கிழக்குப் பல்கலைக் கழக வேந்தராக அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராசாவைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு மட்/மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை பிரதி அதிபர் க.மகாலிங்கசிவம் தலைமையில் அவரது ஊரான திருப்பழுகாமத்தில் மிகவும் கோலாகலமாக இடம் பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விழாநாயகனும், அவரது மனைவியும் திருப்பழுகாமத்தின் நுழைவாயிலில் இருந்து இன்னியங்கள் முழங்க, கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டோர் புடைசூழ ஊர் வலமாக மட்/பட்/ திருப்பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலய

த்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

ஊர்வலம் பாடசாலையைச் சென்றடைந்ததும், நிகழ்வுகள் நடைபெற்றன. பாராட்டுரைகள், நாட்டிய நிகழ்வுகள் நடைபெற்று திருப்பழுகாமம் மண்ணுக்குப் பெருமை சேர்த்த வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராசா கல்விமான்கள், ஊர்ப்பெரியார்கள், பொதுமக்களால் பொன்னாடை போர்த்தப்பட்டு, மலர்மாலை அணிவித்துப், பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

என்றென்றும் அன்புடன்

-ஆசிரியர்-

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 450/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.

கணக்கு இல : 113100170002181

(நடைமுறைக்கணக்கு)

காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும். தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமி யங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கி யங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற் றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

- கட்டுரை -

# "கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்"

- கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம் -

பொருள் பொதிந்த இச்சொற்றொடர் தமிழர்களால் பொன்னே போல் போற்றப்பட்டு வருகின்றது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் **"கற்க கசடற கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக"** - என்று கூறியுள்ளார். கற்க வேண்டியவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள் என்று திருவள்ளுவர் கூற, கண்ணில் கண்டவற்றையெல்லாம் கற்பதனால் பண்டிதன் ஆக முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. கண்டது கற்கப் பண்டிதை ஆவாள், கண்டது கற்கப் பண்டிதர் ஆவார் - என்று சொல்லியிருக் கலாமல்லவா?. மிகச் சொற்பமான புத்தகங்களை கண்டவன் அவற்றைக் கற்று விட்டதனால் பண்டிதன் என்ற தகுதியை அடைந்துவிடுவானா? என்ற கேள்விகள் எழுகின்றன. இக்கேள்விகளில் நியாயம் இருப்பதனால் இவற்றை எளிதில் புறக்கணித்துவிட முடியாது. இவை பொருத்தமான கேள்விகளாகவே புலப்படுகின்றன. **"பழமொழி பொய்த்தால் பழஞ் சோறு சுடும்"** என்பதும் ஒரு பழமொழி. அப்படியானால் கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது பொருளற்ற ஒரு மொழியா? என்ற ஐயப்பாடு எழுகின்றது.

மனிதர் வாசிப்பதன் மூலமும் கேட்டுக் கிரகிப்பதன் மூலமும் அறிவைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். பேசுதல், எழுதுதல் மூலம்

தமது அறிவை வெளிக்கொணர்கின்றனர். வாசிப்பு மனிதனை பூரண மனிதன் ஆக்குகின்றது என்பதை உணர்ந்த பழந்தமிழர் வாசிப்பதை வலியுறுத்துவதற்காக இப்படிக் கூறியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறான சிந்தனைகளை கிளறி விட்டுச் சிந்திக்கத் தூண்டிய உண்மைச் சம்பவம் ஒன்றினை வாசக நேயர்களோடு பகிர்ந்துகொள்ள விழைகின்றேன். இந்த நிகழ்வோடு தொடர்புடையவர்களின் ஊர், பெயர், பதவி முதலியவை நினைவில் இருந்தும் அவற்றைக் குறிப்பிடாமல் நிகழ்ந்ததைக் கூறுகின்றேன்.

பல வருடங்களுக்கு முன்னர் நூலாசிரியர் ஒருவர் தனது நூல் வெளியீட்டு விழாவுக்கான அழைப்பிதழோடு வீடுதேடி வந்தார்.விழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்போடு வேண்டுகோள் விடுத்தார். விழாவுக்குச் சென்றிருந்தேன். சம்பிராதாய பூர்வமான நிகழ்வுகளுக்குப் பின்னர் நூல் வெளியீடும், அறிமுகமும் கச்சிதமாக நடந்தேறின. விருந்தினராக வந்த ஒருவர் சுருக்கமாகவும், தெளிவாகவும் பேசினார். **"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்"** என்ற சொற்றொடரை மேற்கோளாகக் காட்டி வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்திப் பேசி முடித்தார்.

பிரதம விருந்தினராக வந்தவர் பேசத் தொடங்கினார். அங்குமிங்குமாகத் தெரிந்தெடுத்த சம்பந்தா சம்பந்தமில்லாத கருத்துகளைப் பேசினார். **"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்"** என்ற சொற்றொடர் பொருளற்றது, பொருத்தமற்றது என்ற வகையில் தனது பேச்சினை நிறைவு செய்தார். அவருடைய கருத்தோடு என்னுடைய கருத்து ஒத்துப் போகவில்லை. நூலாசிரியரின் ஏற்புரையும், நன்றியுரையும் முடிவுற்றதும் பிரதம விருந்தினரிடம் எனது கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டுமென துடித்துக் கொண்டும், கொதித்துக் கொண்டும் இருந்தேன். ஆனால் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. யாரிடமாவது எனது கருத்தை கூறி அவர்களது கருத்தை அறிய விரும்பினேன். அதனை இக்கட்டுரை மூலம் நிறைவு செய்கின்றேன்.

இப்பொன்மொழி ஆணாதிக்கம் நிலவிய காலத்தில் கூறப்பட்டமையினால் **"பண்டிதன் ஆவான்"** என்று கூறியிருக்கலாம். தமிழ் எழுத்து வரிசையில் **"ள்"** என்ற மெய் எழுத்தின் பின்னாலேயே **"ன்"** என்ற மெய் எழுத்து வருகின்றது.


தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் **"ன்"** என்ற எழுத்தே இறுதி எழுத்தாகும். தொல்காப்பியர் தனது இலக்கண நூலில் **"நஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்"** என்று கூறிய பின்னர் அடுத்து **"எஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்"** என்று சூத்திரம் யாத்துள்ளார். இவற்றுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் அக்காலத்திருந்த கோட்பாடுகளுக்கு அமைவாக பின்வருமாறு விளக்கவுரை எழுதினர். **"புத்தென்ற நரகத்திலிருந்து பெற்றோரை மீட்கக் கூடியவன் புத்திரன்"** என்பதால் நஃகான் ஒற்றை இறுதியாகவுடைய ஆண்பால் உணர்த்தும் சூத்திரத்தை முதலில் வைத்தார் என்றனர்.

திருக்குறள், மூதுரை, நல்வழி முதலான நூல்கள் இனிப்பான கற்கண்டு போன்றவையாதலால் அது கற்றவன் பண்டிதன் ஆவான் என்று சொல்ல வந்ததை ஔவையார் **"வரப்புயர"** என்று சுருக்கிக் கூறியது போல் **"கண்டு அது கற்க பண்டிதன் ஆவான்"** என்று சுருக்கமாகக் கூறினர் என்று விளக்கம் சொல்வோரும் உளர். மிகத் தொன்மையான தமிழ்மொழி இன்று செம்மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சொற் பொருள் விளக்கும் அகராதிகள் தமிழில் அறிமுகமாவதற்கு முன்னர் இலக்கிய, இலக்கண நூல்களில் கையாளப்பட்டுள்ள சொற்களின் கருத்தை அறிந்து கொள்வதற்கு நிகண்டு என்ற நூல்கள் உதவியாக இருந்தன.

சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு, கயாதர நிகண்டு, திவாகர நிகண்டு, வடமலை நிகண்டு என்பனவாய பல நிகண்டுகள் தமிழ் மொழியில் வழக்கில் இருந்தன. அக்கால முறைப்படி இந்த நிகண்டுகளை மனனம் செய்வதே கல்வி பயிலும் மாணாக்கரின் முதல் வேலையும் முதன்மைக் கடமையுமாகும். நிகண்டினை மனனம் செய்துகொண்ட ஒருவருக்கு இலக்கிய, இலக்கணங்களில் உள்ள சொற்களுக்கு இலகுவாக பொருள் புரிந்துவிடும். இதனை வலியுறுத்தவே **"நிகண்டு அது கற்கப் பண்டிதன் ஆவான்"** என்று பொருள் பொதிந்த வகையில் கூறினர். அதுவே பொன்மொழி. காலப் போக்கில் முன் எழுத்தாகிய **"நி"** மறைந்து போக **"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்"** என்ற சொற்றொடர் போற்றப்பட்டு வருகின்றது எனக் கூறுவது பொருந்துமா? என்பதை தீர்மானிக்க வேண்டியது வாசகர்களின் பொறுப்பாகும்.

– க.கிருபாகரன் –

# தென்றலின் தேடல்



## கவிஞர் நிலா தமிழின்தாசன்

**மி**க்கேல் அருள்மொழிராஜா என்ற இயற் பெயரையுடையவரான நிலா தமிழின்தாசன் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள நிலாவெளி எனும் அழகிய வந்தாரை இன்முகத்துடன் வரவேற்கும் பழந்தமிழ் கிராமத்தில் பிறந்தவர். இவரைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

### கலை, இலக்கியப் பயணம்

மிகச் சிறு வயதிலேயே கவிதை புனையும் ஆர்வங் கொண்ட இவர் தனது பதின்மூன்றாவது வயதிலேயே கவிதை எழுத ஆரம்பித்து, கையெழுத்துப் பத்திரிகைகளிலும் - மேடை நிகழ்வுகளிலும் அரங்கேற்றிப், பின்னர் சஞ்சிகைகளிலும், நாளேடுகளிலும் தமது கவிதைகள் இடம்பெற்றது கண்டு ஊக்கம் பெற்றவராய் இன்றும் தொடர்ந்தும் எழுதி வருகிறார்.

முதன் முதலாக 1975ஆம் ஆண்டில் சுதந்திரன், சுடர் போன்ற வார, மாத இதழ்களில் தான் இவரது ஆக்கங்கங்கள் களங்கண்டதாகப் பெருமிதத்தோடு **"தென்றலுக்குத்"** தெரிவித்தார். இவரது தமையன் அந்த நாட்களில் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளராக – சமூகத் தொண்டராகத் திகழ்ந்ததுடன், மாறாத தமிழ்ப் பற்றுடையவராகக் கவிதைகளும் புனைந்துள்ளார். ஈவெரா, அறிஞர் அண்ணா, கலைஞர், பாரதி, பாரதிதாசன் போன்றோரது

ஆக்கங்கள் வெளிவந்த திராவிடநாடு, மாலைமணி,மாலைமுரசு, தீப்பொறி போன்ற பத்திரிகைகளைத் தமையன் வாசித்து விட்டுப் போட அவற்றை எடுத்துப் படிக்கும் பழக்கம் இவரை ஆட்கொண்டமையால் தமிழ் உணர்வுக்கு உட்பட்ட கவிஞர் நிலா தமிழின்தாசன் உணர்வு பூத்த கவிஞராக கவி உலகில் அன்று தொட்டு இன்று வரை நாற்பத்திரெண்டு ஆண்டுகளைத் தொடர்ந்து எழுதியுள்ளதாகப் பெருமிதத்தோடு **"தென்றல்"** க்குத் தெரிவித்தார்.

இவற்றோடு கவியரங்களிலும் பங்கு கொண்டு தனது கவித்துவத்தை உலகறியச் செய்தார். மேலும் வெலிற்றாஸ் தமிழ்ப்பணி , தென்றல் எவ். எம் ஆகியவற்றில் இவரது ஏராளமான கவிதைகள் களங்கண்டுள்ளன என்றால் அது மிகையாகாது. கவிதைகள் மட்டுமல்லாது, சிறுவர் சிறுகதைகள், உருவகம், கட்டுரைகள் போன்றவையும் எழுதியுள்ளார். இவை தவிர, சிறுவயதிலேயே நாடகங்கள் நடிப்பதில் ஆர்வங்கொண்ட இவர் பதினைந்து மேடை நாடகங்களில் நடித்துப் பாராட்டும், பரிசில்களும் பெற்றுள்ளார்.

சுதந்திரன், சுடர் என ஆரம்பித்து, வீரகேசரி, தினபதி, சிந்தாமணி தினகரன், தினக்குரல், ஈழநாடு, ஈழநாதம், தமிழ் அலை, இடி, சூளாமணி, தொண்டன், சிரித்திரன், புதிய உலகம், **"தென்றல்"** எனப் பல்வேறு பத்திரிகைகள் - சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**பெற்ற பரிசில்கள்**

- 1975 இல் முதன் முதலில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் நடாத்திய தேசிய மட்டக் கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசிலைப் பெற்றமை.
- 1981 இல் நிலாவெளிக் கமநலசேவை நிலையத்தினர் நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றமை.
- 1982 இல் பாரதி நூற்றாண்டு விழாவை ஒட்டி நடாத்திய கவிதைப் போட்டியில் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாம் பரிசும், மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் பரிசும் பெற்றமை.
- களம் சஞ்சிகை தேசிய ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றமை.

- 1984 இல் பீக்கிங் வானொலியின் தமிழ்ச்சேவை நடாத்திய சர்வதேச ரீதியான கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசிலும், சான்றிதழும் பெற்றமை.
- 1986 இல் கொழும்பு கிறிஸ்தவ இளைஞர் கழகம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றமை.
- 1993 இல் யாழ் ஈழுநாதம் பத்திரிகையில் அந்த வருடம் முழுவதும் வெளியான கவிதைகளில் முதற்பரிசு பெற்றமைக்காக வழங்கப்பட்ட தங்கப் பதக்கம், 1500/= பணப் பரிசில், நூல்கள், சான்றிதழ்கள்.
- 1994 இல் யாழ். ஈழுநாதம் தேசிய மட்டத்தில் நடத்திய கவிதைப் போட்டியில் முதல்பரிசு பெற்றமைக்காக வழங்கப்பட்ட தங்கப்பதக்கம், பணப் பரிசில், நூல்கள், சான்றிதழ்கள்.
- வெரிட்டாஸ் தமிழ்ப்பணி நடாத்திய கவிதைப் போட்டிகளில் பலமுறை பரிசில்கள் பெற்றமை.
- யாழ். சிரித்திரன் நடாத்திய போட்டிகளில் மாதமொரு மணிக்கவிதை, சித்திரப்பா போன்ற போட்டிகளில் பல முறை பரிசில்கள் பெற்றமை.
- 2012 இல் குச்சவெளிப் பிரதேச மட்டத்தில் நடாத்திய கவிதை, பாடலாக்கம், சிறுவர் சித்திரப்பா போட்டிகளில் முதற்பரிசிலும், அதே ஆக்கங்கள் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றமை.
- 2015 இல் மண்முனை தென் எருவில் பற்றுக் கலாசாரப் பேரவை நடாத்திய கவிதை, பாடலாக்கம், சிறுவர் சிறுகதை ஆகியவற்றில் முறையே முதலாம், இரண்டாம், இரண்டாம் இடங்களைப் பெற்றமை.

**விருதுகள் / பட்டங்கள்**

- 1983 இல் - கவிச்சுடர் விருது
- 1993 இல் - அருட்பாவலர் விருது
- 1998 இல் - கவிஞர் திலகம் விருது
- 2000 இல் - கவிமணி விருது
- 2008 இல் - காவியஶ்ரீ விருது

இலங்கையின் ஆற்றல் மிக்க- மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய - இசை- நாடக- நாட்டிய- கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"** எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- 2010 இல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் குறுங்காவியமான **"நெருப்புக்கிடையே நீந்தும் நிலாக்கள்"** நூலுக்காக சான்றிதழும், பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.
- 2011 இல்- திருகோணமலை கோபாலபுரம் தமிழ் வித்தியாலய பொன் விழாவில் பாடசாலை வளர்ச்சியில் ஆர்வத்துடன் செயற்பட்டமை, பாடசாலைக் கீதம் இயற்றியமை, பொன்விழா மலருக்கான ஆக்கங்கள் வழங்கியமை என்பவற்றுக்காகப் பாராட்டிப்- பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.
- 2012 இல்- குச்சவெளிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி, கவிக்கோ விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்டார்.
- 2013 இல் கவிஞன், கதிரவன், மணிப்புறா ஆகிய சிற்றேடுகள் இணைந்து நடாத்திய பொங்கல் விழாவில் மூன்று சஞ்சிகையாளர் களாலும் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.
- 2013 இல் **"நீண்ட காலம் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உரமாய் உழைத்தவர்"** என்ற கௌரவத்துடன், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் சான்றிதழும், பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- 2014 இல் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களை வாழ்த்திப் பாடிய **"நதியைப் பாடும் நந்தவனங்கள்"** (50 கவிஞர்களின் கவிதைகள்) நூல் வெளியீட்டு விழாவில் பொற்கிழியும், நினைவுப் பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

- 2014 இல் இயக்குனர் இமயம் பாரதிராஜாவால் கிரான்குளம் சீ மூன் கார்டன் விடுதியில் வைத்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

- 2015 இல் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்களகத்தினால் வீரகவி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

- 2016 இல் கிழக்கு மாகாண சபை நடாத்திய சாகித்திய விழாவில் வித்தகர் விருது, பொற்கிழி, சான்றிதழ் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.



- 2016 இல் அரச கலாசார அமைச்சு நடாத்திய கலாபூஷணம் விருது வழங்கும் விழாவில் விருதுடன், பொற்கிழி , சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

**கவியரங்குகள்**

- சிறு வயது முதலே கவியரங்குகளில் பங்கு கொள்ளும் ஆர்வங் காரணமாக திருகோணமலை, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கவியரங்களில் பங்கு கொண்டு தனது கவியாற்றலை வெளிக்கொணர்ந்தார்.
- பெருங் கவிஞர்களான இ.முருகையன், புதுவை இரத்தினதுரை, நாவண்ணன், திருகோணமலை கவிராயர், ஜீவா ஜீவரெத்தினம், இயல்- இசை வாருதி வீரமணி ஐயர் போன்ற பிரபலங்களுடன் கவியரங்குகளில் பங்குபற்றியதுடன், தானே பல கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கி நடாத்தியும் உள்ளார்.
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் பல கவியரங்குகளில் கலந்து கவி பாடியுள்ளார்.
- இவற்றோடு சில வெளிநாட்டு தமிழ் வானொலிகளில் நேரடியாக கவி மழை பொழிந்துள்ளார்.

இவ்வாறாகப் பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை உள்ளூரில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலுள்ள வானொலிகள் மூலமும் கவியாற்றலால் வீறுநடை போட்டு வரும் **"தென்றல்"** இன் முதுபெரும் விருட்சங்களில் ஒருவரான நிலா. தமிழின்தாசனின் வாழ்வில் எல்லா வளங்களும் நிறைந்து, இவரின் படைப்புக்கள் பல எம்மை விரைவில் வந்தடைய வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளைத் தினம் தினம் **"தென்றல்"** வேண்டி நிற்கிறது.



-மு.பஷீர்-

# தலைப்பிறை

அருள் சுரக்கும் ரம்ழான் மாதம் இது. எல்லோரது முகங்களிலும் உற்சாகம் அணையுடைத்துப் பாய்கிறது. நன்மைகளைக் கொள்ளையடிக்கும் மாதமிது என்பார்கள். இருக்காதா பின்னே? நன்மைகளை எதிர்கொள்ளலாம். ஆன்மீகச் சுகத்தை அருகணைத்துக் கொள்ளலாம்- என்பது விசுவாசிகளின் கணிப்பு. மேகத்திரை விலகும் முன்னிரவில், இரு முனையும் கூர்மையான பிறைநிலா, வானில் ரம்மியமாகப் பவனி வந்தது. ஜன்னல் திரை விலக்கி, எட்டிப் பார்க்கும் பருவப் பெண்ணின் பொலிவு முகம் போல், அது கோலம் காட்டியது.

தலைப் பிறையைத் தரிசித்து விட்ட பேரானந்தம் சிறுவர், பெண்கள் மனங்களில் பளிச்சிட்டது. கிராமம் சுறுசுறுப்பில் களைகட்டியது. கடைகளில் வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது. தொழுகை தராபீஹ், குர் ஆன் ஓதல், நீயத்து வைத்தல் போன்ற சகல காரியங்களாலும் இல்லங்கள் விழிப்படைந்தன.

சபீனா துயரம் செறிந்த முகத்துடன் வாசற்படியில் அமர்ந்திருக் கிறாள். அவளது உள்ளுணர்வுகளில் பிழிந்துருக்கும் துயர நினைவோட்டங்கள் பாதையின் சந்தடிகளில் மனம் ஒன்றானது. நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். இயலாமையின் இறுக்கம் அடிமனதைத் துளைத்தது. தலைப்பிறை

தொடுவானில் சுடர்ந்தது. இனிப் பிள்ளைகள் மூவருக்கும் - தனக்கும் பின்னிரவு சஹர் உணவு சமைக்க வேண்டும். கையில் காசின்றி, நோன்புக் கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது? ஆண் துணையோ, வருவாயோ இன்றி, இரண்டு குமருப் பிள்ளைகளோடும், சின்ன மகளோடும் - நாட்களைக் கடத்துவது, பாரிய சுமைகளாகி, அவளது அன்றாட வாழ்வு பாதிப்பில் திணறியது. பகல் பொழுது பூராகவும் உபவாசம் இருப்பதற்கு, உடம்பில் தெம்பு வேண்டுமே. இரவு கொஞ்சம் புஷ்டியான ஆகாரம் உட்கொண்டால் தான், பகல் பொழுதின் பசிக்குத் தாக்குப் பிடிக்கும்.

சாப்பாடுதான் நோன்புக்கு ஆதார சுருதியா? ஒரு பேரீச்சம் பழத்தைச் சாப்பிட்டு விட்டு, நோன்பு பிடித்த அடியார்களைப் பற்றி வரலாறு சொல்கிறதே! தீனும் தேவை, த்தீனும் தேவை. முன்னது ஆன்மாவுக்கு. பின்னது உடலுக்கு. கையில் காசின்றி, கொடுத்துதவ யாருமின்றி நான்கு வயிறுகளுக்கு, நோன்பு நாளில் சஹர் வேளைக்குச் சுவையாகச் சமைத்துப்போட சபீனாவுக்கு வக்கேது?

**"இண்டைக்கு பட்டினி நோன்பு தான். தலை நோன்பெண்டு என்னத்தச் செய்ய?"**

பொருளாதார நெருக்கடியில் அனலிலிட்ட புழுவாய், அவள் மனம் வெந்து தவித்தது. மூத்தவள் பெரோஸா, ஜன்னலுக்கருகில் அமர்ந்து பக்தியோடு குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தாள். இளையவள் சரீனா, சோர்ந்து போய் தாயோடு நெருக்கமாய் வந்து ஒட்டிக் கொண்டாள்.

**"இண்டைக்கு ராவைக்கு நோன்பு புடிக்க, என்ன உம்மா செய்யப் போற?"** என ஆவலோடு கேட்டாள் இளையவள். மகளின் முகத்தைப் பொறுமையோடு, சுவாரஸ்யமின்றிப் பார்த்தாள் தாய். **"என்ன செய்ய மகள்! அல்லாஹ் வைச்சபடி நடக்கும். இல்லாட்டி எல்லாம் பட்டினி நோன்பு புடிப்போம்!"** மகன் உம்மாவின் மடியில் தலையை வைத்தவாறு.....,

**"எனக்கேலா பட்டினி நோன்பு புடிக்க, உம்மா! அடுத்த வூட்டுக் கமால்ட வாய்ப்பா, கடைக்குப் பெயித்து, எறைச்சி, தயிரு, வாழைப்பழம், எல்லாம் மிச்சமா கொண்டந்தீக்கி, எங்கட வூட்டுல தான் எப்ப பார்த்தாலும், இல்ல....!"** சின்னவன் வீட்டில் நித்தமும் நிலவும் வறுமைக்கு எதிராய் போர்க்கொடி தூக்கினான். சபீனாவின் மன அரங்கில் பழைய நினைவுகள் அரங்கேறின.

**"அவரு உசிரோட இருக்கச் செல்ல, எங்களுக்கு எந்தக் கொறை யையும் வைக்கல்ல. ராவு பகலெண்டு பொன்சாதி, புள்ளயள் எண்டு பறந்து திரிஞ்ச எங்கட தலையெழுத்து இப்படியாப் போன, யா! அல்லாஹ்! முப்பது நோன்பும், பெருநாளும் - எல்லா வருஷமும் மனசு போல நடந்த அஞ்சி**

**வருஷத்துக்கு முந்தி, அந்த வாகன விபத்து நடக்காம இருந்திருந்தா இண்டைக்கும் இந்தக் குடும்பம், நிம்மதியா இருந்திருக்கும். இனி எங்களுக்கு அல்லாஹ் விட்ட வழி தான். அந்த மனிஷன் சுவர்க்க வாதியாச் சேரோணும்..."** சபீனா நெஞ்சுருகிக் கண்ணீர் சொரிந்தாள். அவளது துயரப் பிரலாபம் பிள்ளை களையும் நெஞ்சுருக வைத்தது. அமீனின் மறைவிற்குப் பிறகு- குடும்பச்சுமை, சபீனாவின் தலைக்கு இடம்மாறியது. ஏழைப் பெண்ணான அவளால், கூன் விழுந்து, நிர்க்கதியில் வீழ்ந்து விட்ட, இந்தக் குடும்பத்தை எவ்வாறு நிமிர்த்தி விட முடியும். அவளுக்குச் சவாலாய்அமைந்து விட்ட வாழ்வியல் அழுத்தங்கள் இவை.

**"இந்தக் கொமருகள் ரெண்டையும் எப்படிக் கரை சேர்ப்பேன்? சின்னவன நல்லாப் படிக்க வைச்சி, எப்போ மனுசனாக்குவேன்? போன வருஷம் நோன்புக் கெண்டா, எங்கட ஊரு அனஸ் ஹாஜியாரு, ஏழ எளியது களுக்கு தலை நோன்பண்டைக்கே, போதுமான நல்ல உதவிகள் செஞ்சாரு. அவருக்கு அல்லா பரக்கத் செய்யோணும். இந்த வருஷம் பாவம். பாரிசவாதத்தில் யாவாரமும் பட்டுப் பொயித்து. வியாதில படுத்திட்டாரு. கஞ்சக்கபோதிகள் நல்லா இருக்கிறானுகள். நல்ல மனுசனுக்குத் தான் எல்லாப் பக்கத்தாலையும் கஷ்டம்".**

சபீனா ஆற்றாமையினால் புலம்பிக் கொண்டிருந்தாள். இந்த வறுமைப் பிடியிலிருந்து மீட்சி பெற அவள் விடியல் சுபஹிப் எழும்பி, கடையப்பம் சுட்டு, விற்று வந்ததில் பிள்ளைகளுக்கு ஒரு நேர ஆகாரமாவது கிடைத்து வந்தது. இனி ஒரு மாதத்திற்குப் பெரிய முடக்கம் தான். நோன்பு நாட்களில் கடையப்பம் கேட்டு எவன் வருவான்? இத்யாதிப் பிரச்சினைகள், அவளின் உள்ளுணர்வுகளை உலுப்பிக் கலைத்தன. பள்ளிவாசல் ஒலிபெருக்கியிலிருந்து அறிவித்தலொன்று காற்றோடு கலந்து வந்தது. **"ரம்ழான் தலைப்பிறை தென்பட டுள்ளதால், ஜமா அத்தார்கள் தராவீஹ் தொழுகைக்கு வருமாறு அழைக்கிறோம்"**

வானத்தை அக்கறையோடு அண்ணார்ந்து பார்த்தாள் சபீனா. தங்கத் துண்டை நறுக்கி ஒட்டினாப் போன்று அழகு ஜோதியாய் ரம்ழான் பிறை சுடர்ந்தது. ஊரும், பள்ளி வாசலும் உற்சாகத்தில் மிதந்தன. பக்கத்து வீட்டுப் பெண்கள் தலையில் முக்காட்டை இட்டவாறு, அலுவல்களில் சுற்றிச் சுழன்றனர்.

சபீனாவின் வீட்டில் இன்னும் அடுப்பெரியவில்லை. அது வயிற்றில் தாராளமாக எரிந்தது. பிள்ளைகளின் முகங்களில் கவலைகளின் ரேகைகள் படர, அங்கு ஓர் அசாதாரண மௌனம் நீடித்தது. அவள் அடுப்படிக்குச் சென்று, அசிரத்தையாக, எப்போதோ பத்திரப்படுத்தி வைத்திருந்த, கொஞ்சம் அரிசி கண்ணில்பட்டது. இன்னொரு பாத்திரத்தில் வைத்திருந்த கொஞ்சம்

மரவள்ளிக்கிழங்கும் இருந்தது. அவள் நெஞ்சை நேராக நிமிர்த்தி, ஒரு சோக நெடுமூச்செறிந்தாள்.

**"அல்ஹம்துலில்லாஹ்! இதைக் கொண்டாவது இண்டைய நோன்பைத் தொடங்கலாம்"** என்ற நினைப்பில் வேலையில் மூழ்கினாள். முகத்தை அஷ்டகோண மாக்கிக் கொண்டு, இளையவள் **"இது என்ன உம்மா! வெறும் மஞ்சக்காயும், சோறும் திண்டிட்டு நோன்பு புடிக்க ஏலுமா? சஹர் சாப்பாட்டுக்கு என்னத்தத் திண்ணுற?"** அவளது கேள்வியில் வக்கற்ற ஏழ்மையின் தொனி, காட்டமாய்க் கலந்திருந்தது. அந்தக் கேள்விக்கணை சபீனாவின் நெஞ்சைக் கீறிக் கிழித்தது. கையிலிருந்த கிழங்கையும், கத்தியையும் கீழே தூக்கி எறிந்தாள்.

ஆத்திரமும், அழுகையுமாக வார்த்தைகள் உஷ்ணமாக் வெடித்தன. **"நான் என்னடீ செய்ய? எல்லாம் சேர்ந்து உம்மாட சதைய பச்சையா வெட்டித் திண்டிட்டு, நோன்பு புடியுங்க...! அந்த மனுஷனுக்குத் தந்த மௌனத்த, அல்லாஹ் எனக்குத் தந்திக்க, நிம்மதியாப் போய்த்திருப்பன். இப்ப நானொருத்தி ஈந்து கொண்டு கருமம் தொலைக்கிறன்"**

கண்ணீர் மடை உடைத்துப் பெருக, தொண்டை கரகரத்தது. அவளுக்குத் தலை கிறுகிறுத்தது. வேலைகளை நிறுத்தி விட்டு, நிலைப்படியருகே அமர்ந்து கொண்டு, உரத்த குரலில் அழுதாள். உம்மாவின் துயரம் கண்டு பேதலித்து வாரிசுகள் வாய்பேசா மௌனிகளாயினர். அவர்கள் ஓதலும், தொழுகையும் முடித்து - பசித்த வயிறுகளோடு நித்திரைக்குச் சென்றனர்.

சோகங்களை அடைகாத்து அனுபவப்பட்ட சரீனா, அடுக்களைக்குச் சென்று இருந்ததைக் கொண்டு சமைத்து விட்டு, தொழுது துவாச் செய்து விட்டு, ஆன்மீக ஆறுதல் பெற்றவளாய், பசி மறந்து பாயில் சரிந்தாள்.

பக்கத்தில் நிர்விசாரமாக உறங்கும் சின்னவளின் தலையை விரல்களால் வருடிக் கொடுத்தாள். பழைய நினைவுகளை மீண்டும் மீட்டிப் பார்க்க மனம் விரும்பினாலும், உடல் அசதியில் சிறிது கண்ணயர்ந்தாள். மூடிய இமைச் சிறகுகளில், கனவொன்று கருக்கொண்டது. அமீன் சிரித்த முகத்துடன், கம்பீரமாக காட்சி கொடுத்தான்.

**"சபீனா! இண்டைக்குத் தலை நோன்புதானே! கோழி, தயிரு, பழம், மரக்கறி, அரிசி, எல்லாச் சாமானும் கொண்டு வந்திரிக்கி, பிள்ளைகள் எல்லாரையும் எழுப்பி நோன்பு புடிக்க வையுங்கோ! அல்லாஹ் சொல்றான், நோன்பாளிகளுக்கு கூலி கொடுக்கும் பொறுப்பு எனது சொந்தக் கண்காணிப்பில்**

**இருக்கு. முப்பது நோன்பையும் முழுக் குடும்பமும் சரியாப் புடிக்கோணும்...!"**

அவளால் நம்ப முடிய வில்லை. தன்னைப் பிடித்துப் பேயாட்டம் போடும் துயரங்கள் எல்லாம், இனி சூரியஒளியில் மறையும்பனித்துளிகளாக மறையுமா? இனிக் காலமெல்லாம் அவரோடு கைகோர்த்துக் கொண்டு வாழும், பாக்கியம் வந்து விட்டதா? கனவுச் சுழற்சி , நினைவின் எழுச்சி, எல்லாம் கைநழுவிப் போக, மறுகணம், கண்விழித்துப் பதறியடித்துக் கொண்டு எழுந்தாள். அற்ப சந்தோஷத்தை ஒரு கணம் மட்டும் தந்து விட்டுக் கலைந்து போன, அந்தக் கனவை எண்ணி மனதிற்குள் குமைந்தாள். தடுமாறித் தவிக்கும் மனதை ஆசுவாசப் படுத்தியவாறு, மீண்டும் உறக்கத்தைச் சிறையிட எத்தனித்தாள். தோல்வி தான். பன்னிரெண்டு மணிக்கு மேலாகி விட்டது. வீட்டு முற்றத்தில் வாகனமொன்று, நிறுத்தும் ஓசை கேட்டது. தொடர்ந்தாற் போல் யாரோ உரையாடுவது தெளிவின்றிக் கேட்டது.


சிறிது நேரத்தில்......

**"தாரு வூட்டுல, சபீனா.. தாத்தா! கதவத் தொறங்கோ...!"** கேட்டுப் பழக்கப்பட்ட குரலாக உணர்த் தினாலும், பதட்டம் தணியாமல், **"தாரு இந்த நேரத்தில?"** என்று வினவியவாறு கதவைத் திறந்தாள். நலன்புரி சங்கத்தைச் சேர்ந்த சில வாலிபர்கள் வாசலில் நின்று கொண்டிருந்தார்கள்.

**"சபீனாத் தாத்தா! கொழும்பிலிருந்து ரபீக் ஹாஜியார் வந்திருக் கிறார். ஸக்காத் கொடுக்க, நிறையப் பணம், சாப்பாட்டுச் சாமான் எல்லாம் கொண்டு வந்திருக்கிறார். ஊரிலுள்ள ஏழைகளின்ட லிஸ்டை நாங்கள் குடுத்தோம். அதில முதலாவது இடம் உங்கடதான். நோன்பு முப்பதுக்கும் தேவையான எல்லாச் சாமான்களும் இதில் இரிக்கி. இந்தாங்க இதில் பணமும் இரிக்கி. ஒரு சந்தோசமான செய்தி. உங்கட குடும்பத்தப் பத்தின எல்லாத் தகவல்களையும் ஹாஜியாரு கிட்ட சொன்னோம். உங்கட மகள்கள் ரெண்டு பேருக்கும் ரெண்டு தையல் மெசின்கள் தாரதாக வாக்குறுதி தந்திருக்கார்".** சபீனாவின் வீட்டிற்குள் சாமான் பொதிகளைக் கொண்டு வந்து வைத்தார்கள் இளைஞர்கள்.

**"அல்ஹம்துலில்லாஹ், ஒங்க எல்லோருக்கும் அல்லாஹ் நாயன் பரக்கத் செய்யோணும்"** சேலைத் தலைப்பால் தலையை மறைத்தவாறு, இரு கையேந்தி துவா கேட்டாள். அவர்கள் சென்றதும், கதவைச் சாத்த வந்த சபீனா, எதேச்சையாக வானத்தைப் பார்த்தாள்.

ரம்ழான் மாதத்துத் தலைப் பிறை, பிரபஞ்சத்தை எழிலூட்டிக் கொண்டிருந்தது.



தாமரைத் தீவான்,
ஈச்சந்தீவு, கிண்ணியா.

# நிறைகுடம்!!!


பாவாணரைப் போல நாம்,
படிக்க வேண்டும் நூல்களை!
காவாமலே காக்கனும்,
கன்னித் தமிழ் மொழியினை!

இலக்கியமும் படிக்கனும்
எல்லா நூலும் பார்க்கனும்!
இலக்கணமும் படிக்கனும்
எவையும் ஆய்ந்து படிக்கனும்!

நிறைகுடம் போல் ஆகனும்,
நிறைய நூல்கள் கற்றுமே!
குறை குடமாய்த் தளம்பினால்
குறையுமே நம் மதிப்பெல்லாம்!



காட்ட வேண்டும் சான்றுகள்,
கற்ற நூலில் தேடியே!
மீட்டெடுக்கும் புகழினால்
மேன்மை யாக வாழலாம்...!!!



## நவீன இலக்கிய வளர்ச்சிக்கு

# சுவாமி விபுலானந்தரது பங்களிப்பு!!!

–பேராசிரியர் செ.யோகராசா–

நவீன இலக்கியம் என்று கருதப்படுவது நாவல், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், வசனக் கவிதை, புதுக்கவிதை முதலியனவும்– நவீன இயல்புக்கேற்ப புதிய இயல்புகள் பெற்றுக் கொண்ட நவீன கவிதை, நவீன நாடகம் முதலியனவுமாம். தமிழ்ச் சூழலில் இத்தகைய புதிய வடிவங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து – வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு வடிவங்களில் அறிமுகமாகின்றன. அன்றைய சூழலில் இவற்றை முற்று முழுதாக ஏற்பவருமிருந்தனர். முற்று முழுதாக நிராகரிப்பவருமிருந்தனர். பலவற்றை ஏற்றுச் சிலவற்றை மறுதலிப்பவருமிருந்தனர். சுவாமி விபுலானந்தர் இறுதியாகக் கூறப்பட்ட வழியில் சென்றவராவர்.

நவீன கவிதையைப் பொறுத்தவரையில் அதன் மீதான ஈடுபாடு சுவாமி விபுலானந்தரைப் பொறுத்தளவில் முதன் முதலாக வெளிப்பட்டது – நவீன கவிதை முன்னோடியான பாரதியாரது மேதாவிலாசத்தை ஏற்றுக் கொண்ட நிலையிலாகும். நவீனத்தின் (Modernity) ஒன்று திரண்ட வடிவமே பாரதியார். அவரைப் **"புரிதல்"** என்பது நவீனத்தைப் புரிந்து கொண்டதற்குச் சமமானது என்பர். இத்தகைய சூழலில் பாரதியாரை சரியாகப் புரிந்து கொண்ட முன்னோடிகள் இருவருளொருவர் ஈழத்தவரான சுவாமி விபுலானந்தராகின்றார். அவ்விதத்தில் அன்னார் தனித்தும் – இணைந்தும் எழுதிய இரு கட்டுரைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை நவீன கவிதை தொடர்பான பாரதியாரின் பன்முக ஆற்றலையும் முதன் முதலாக இனங்காண்பவை.

அது மட்டுமன்று, செயற்பாட்டு ரீதியில் **"பாரதியார் புகழ் பரப்பிய முன்னோடிகளுள் முக்கியமான வராகவும் சுவாமி விபுலானந்தர்"** காணப்படுகின்றார். தமிழ் நாட்டிலே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் **"பாரதியார் கழகம்"**

நிறுவுகின்றார். ஈழத்திலே மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, கல்முனை, கொழும்பு எனப் பல இடங்களிலும் சொற்பொழி வாற்றுகின்றார். ஈழத்துப் பாட நூல்களிலும் பாரதியார் கவிதைகள் இடம்பெறச் செய்கின்றார்.

நவீன கவிதையின் வரவு நீண்ட காலமாகத் தமிழ் நாட்டுப் பண்டித வர்க்கத்தினர் பலரது எதிர்ப்புக்குள்ளாயிற்று. (ஈழத்திலும் இத்தகைய நிலை காணப்பட்டது. விரிவஞ்சி இது பற்றிக் கூறப்படவில்லை.) இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலை சுவாமி விபுலானந்தர் புரிந்து கொண்டதன் விளைவே அவரெழுதிய **"ஆங்கிலவாணி"** என்ற கட்டுரை. **"ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டினை ஒருவாறு நிகர்ப்ப, ஆரியமும் தமிழும் வல்ல பண்டிதமணியாருக்கு ஆங்கிலமொழிக் கவிநயத்தினை ஒரு சிறிது காட்டுதல் எழுந்த"** அக்கட்டுரையில் முக்கியமான - புகழ் பூத்த - மேலைத்தேயக் கவிஞர்களான சாசர், ஸ்பென்சர், ஷேக்ஸ்பியர், மில்ரன், வால்ரர், ஸ்கொட், வேட்ஸ்வேத், பைரன், ஷெல்லி, ரெனிசன், கீட்ஸ், றொபேட், பிறௌனிக் ஆகியோரது சிறப்பான சில கவிதைகள் குறிப்பிட்ட கவிஞர்களது வாழ்க்கைப் பின்புலத்தோடு அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. **"கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் அப்பொருள் பற்றி இது போன்ற சிறப்புமிக்க அறிமுகக் கட்டுரை வேறெவராலும் எழுதப்பட வில்லை".** - என்று பேராசிரியர் கைலாசபதி (1969 இல்) குறிப்பிட்டிருப்பது இவ்வேளை நினைவிற்கு வருகின்றது.

எனினும், சுவாமி விபுலானந்தரது கவிதைகளில் கணிசமானவை உள்ளடக்க ரீதியில் மரபு வழிப்பட்டனவே. உள்ளடக்க ரீதியில் பாரதியாரின் நவீன கவிதையூடாக வெளிப்பட்ட விடயங்கள் பலவும் (உ+ம் - தேசியம்), சுவாமி விபுலானந்தரது கட்டுரைகளிலேயே இடம்பெற்றுள்ளன. ஆயினும் அறிந்தோ- அறியாமலோ வசனக் கவிதை முன்னோடியாகப் பாரதியார் விளங்குவது போன்று,ஈழத்து வசனக் கவிதை முன்னோடியாக சுவாமி விபுலானந்தர் திகழ்வது பலருமறியாததொன்று. **"ஆகாச வாணி"** யிலுள்ள மொழிபெயர்ப்புக் கவிதைகளுள் சில வசனக் கவிதையாகவே விளங்குகின்றன. உதாரணமாக :- தெனிசனின் கையறு நிலைச் செய்யுளைப் பற்றிய மொழி பெயர்ப்பானது பின்வருமாறு ஆரம்ப மாகின்றது.

**"ஆண்டவனது திருமகனே! அருந்திறலுடையாய்! அழியா அன்பின்**

**நிலைக்களமோ! நினது திருமுகத்தை நேரிற் கண்டில மெனினும் உள்ளத்துணர்ச்சியே (நம்பிக்கையே) துணையாக நின்னை நம்பி நின்னருளில் கலந்து நிற்கின்றோம்".**

நவீன நாடகத் தோற்றம் ஈழத்திலே முப்பதுகளளவிலே உருவான போது அம்முயற்சியை வாழ்த்தி வரவேற்றார் சுவாமி விபுலானந்தர். நவீன நாடக முன்னோடியான பேராசிரியர் க.கணபதிப்பிள்ளைக்கு பின்வருமாறு மடல் எழுதுகின்றார். **"நானாடகமும் காதலி ஆற்றுப்படையும்"** கிடைத்தன.

முற்றும்படித்து மகிழ் வுற்றேன். பொருளோ- பொருளெனப் பெயரிய மற்றொரு நாடகம் அண்மை யில் அரங்கேறியதாக ஈழகேசரியில் படித்தேன். **"மட்டக்களப்பு வழக்கு மொழியினையும், ஓரிரண்டு நாடகங்களில் படம் பிடித்து வைப்பது நன்று..."**

சுவாமி விபுலானந்தர் தாமே நாடக முயற்சிகள் சிலவற்றில் ஈடுபட்டுமுள்ளார். இவற்றின் உள்ளடக்கம் புறநானூறு முதலான சங்க இலக்கியங்களில் இடம்பெறும் அரசர்களது வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டது. உதாரணமாக:- **"மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன்"** இத்தகைய முயற்சியேயாகும்.

நாவல் இலக்கியம் தமிழ்ச் சூழலில் தோற்றம் பெற்று வளர்ந்த காலத்தில் அதன் நோக்கம் காரணமாக (சிற்றின்ப நாட்டம் முதலான ஒழுக்கக் கேடுகள் உருவாக வழி வகுத்தல்) பெரியோர்கள் பலராலும் ஏற்கப்படவில்லை. சுவாமி விபுலானந்தரும் அவ்வாறே செயற்பட்டார். ஆனால் பிற்காலத்தில் சிறுகதை, நாவல் முதலானவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவற்றின் போக்கிலே மாற்றம் ஏற்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றமை குறிப்பிடத் தக்கது. நாற்பதுகளளவிலே மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கக் கூட்டமொன்றிலே அவர் பின்வருமாறு வலியுறுத்தியிருப்பது இதற்குச் சான்றாகின்றது.

**"நீங்கள் உங்கள் மனோ தர்மத்தின்படி நன்றாக எழுதுங்கள். புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள். ஆனால் மற்றவர்களைக் கண்டிக்கத் துணியாதீர்கள். சொந்த மண் மணம் வீசும் சிறு கதைக ளையும், நாவல்களையும் அதிகமாக எழுதுங்கள். எழுத்தில் எப்போதும்**

**சொற்செட்டும், இலக்கணமும், கருத்து ஆழமும் இருக்க வேண்டியது பிரதானம்"**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்த ஈழத்துப் புலவர்கள் பலர் சமகாலப் பிரச்சினைகள் பலவற்றை பழந்தமிழ் பிரபந்தங்களூடாக வெளிப்படுத்த முனைந்தனர். (உதாரணமாக:- தி.த.சரவணமுத்துப் பிள்ளையின் தந்தைவிடுதூது – பொருந்தாமணம் பற்றியது) இருபதாம் நூற்றாண்டிலும் இம்முயற்சி தொடர்ந்தது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆற்றுப்படை வடிவத்தில் யாழ்ப்பாணப் பண்பாட்டு வழக்காறுகளைப் பதிவு செய்தார். (அதுவே காதலி ஆற்றுப்படை). இத்தகைய முயற்சிகளைச் சுவாமி விபுலானந்தர் வரவேற்றார். (பார்க்க- பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு எழுதியதாக இக்கட்டுரையில் ஏலவே தரப்பட்டுள்ள மடல்).

நாவல், சிறுகதை போன்றே **"கட்டுரை"** யும் நவீன இலக்கிய வடிவங்களுள் ஒன்றேயாகும். ஏனோ தெரியவில்லை. இது பற்றி ஆய்வாளர்கள் பலரும் கவனத்திற் கெடுப்பதில்லை. அது எவ்வாறா யினும் ஈழத்தில் முதன் முதலாக கட்டுரைகள் அதிகமெழுதியவரென்ற விதத்தில் சுவாமி விபுலானந்தர் மிக முக்கியமானவர் என்பது கவனத்திற்குரியது. அதுவும் அவ் வகைக் கட்டுரைகள் தமிழ்மொழி, தமிழ் இலக்கணப் பழந்தமிழ் இலக்கியம், இசை, கல்வி , அறிவியல், சமயம், வாசிப்பு, நவீன இலக்கியம், உடல் நலவியல் முதலான பல்துறைகள் சார்ந்தனவாகவிருப்பது அவற்றின் சிறப்பியல்பு. சுவாமி விபுலானந்தரது சமகால அறிஞர்களெவரும் அவ்வாறு பல்துறை சார்ந்த கட்டுரைகளை எழுதியவரல்லர் என்பது கவனத்திற்குரியது.

விமர்சனமும் நவீனகால இலக்கிய முயற்சியேயாகும். புனைகதைகள் உருவானபோது அவற்றை விமர்சிக்க எழுந்த இவ்வடிவம் பின்னர் முற்பட்ட இலக்கியங்கள் உட்பட சமூகத்துடன் தொடர்புபட்ட பல்வேறு ஆக்க, இலக்கிய முயற்சிகளையும் விமர்சிப்பதாகப் பரிமாணம் பெற்றது.

இவ்விதத்தில் சுவாமி விபுலானந்தர் பார்வையானது இரசனை முறை விமர்சனம், ஒப்புமுறை விமர்சனம், வரலாற்று முறை விமர்சனம் முதலான பல்துறை சார்ந்தும் படரலாயிற்று. இறுதியாகக் குறிப்பிட்ட

விமர்சன முறைதவிர,ஏனைய அனைத்தையும் கோட்பாட்டு ரீதியாக மட்டுமன்றி , செயன்முறை ரீதியாகவும் அவர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியவாறான சுவாமி விபுலானந்தரது நவீன இலக்கியம் சார் எழுத்தாண்மை காரணமாகவே சென்ற நூற்றாண்டுகளின் நாற்பது களின் இறுதியில் உருவான இலங்கை எழுத்தாளர் சங்கம் அதன் தலைமைப் பதவியை அடிகளாருக்கும், (செயலாளர்கள் - மார்ட்டின் விக்கிரமசிங்க, கே.கணேஸ்) அளித்துத் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது எனலாம்!

## முகப்பில்....

திருப்பழுகாமத்துக்குப் பெருமை சேர்ந்த கிழக்குப் பல்கலைக் கழக வேந்தர் வே.விவேகானந்தராசாவைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வில் வேந்தரையும், அவரது பாரியாரையும் ஊர்ப் பிரமுகர்கள் பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து திருப்பழுகாமம் நுழைவாயிலிலிருந்து பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயம் வரை மேள வாத்தியம் முழங்க அழைத்து வருவதைக் காணலாம்.

எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. எழுதி அனுப்பப் படும் ஆக்கங்கள் புள்ஸ்கப் தாளில் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

(ஆ - ர்)







**நூல்** :- மட்டக்களப்பு களுதாவளை


**இறுவட்டு** :- சுயம்புலிங்கப் பிள்ளையார் அற்புதப் பாடல்கள்

**ஆசிரியர்** :- **“வீசுதென்றல்”** ஆ.அரசரெத்தினம்

**வெளியீடு** :- திருவருள் நூல் வெளியீட்டுக் குழு.

**முகவரி** :- வாகரையார் வீதி, களுதாவளை -01, களுதாவளை.

இந் நூலில் மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் அற்புதப் பாடல்கள் இலகுதமிழில் முழுப்பிரசவமாக வெளிவந்துள்ளது. இதில் ஆசியுரை, வாழ்த்துரை, கருத்துரை என்பன இடம்பெற்றுள்ளன. இவை இன்றைய நவீனயுகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆலயங்கள் ஒவ்வொன்றும் இவ்வாறான பாடல்களை ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன. இதனோடு நின்று விடாமல் இப்பாடல்களை இறுவட்டாகவும் வெளியிட்டு சாதனை படைத்திருக்கிறது களுதாவளை திருவருள் நூல் வெளியீட்டுக் குழு.




இப்பாடல்களை தனது செயற்திறனால் அழகுற எழுதியுள்ளார் **“வீசுதென்றல்”** ஆ. அரசரெத்தினம். மேலும் பாடல்களுக்கு உயிரோட்டம் கொடுத்துப் பாடியுள்ளார்கள் சி .மகேந்திரனும், ம.டேசானியும். இவை மட்டும் போதுமா? இப்பாடலுக்கு இசையமைப்பாளர் அ.செல்வகுமார் உன்னதமான இசைவழங்கியுள்ளார்.

# வாசகர் நெஞ்சம்

## தென்றலே வாழி!!!

தினக்குரல் பத்திரிகையில் உங்கள் **"வாசகனின் சுவாசம்"** சஞ்சிகையின் விபரங்கள் அடங்கிய செய்தியை வாசித்து அறிந்து, பரவசம் அடைந்தேன். மேலும் மக்களுக்கு இதமூட்டும் **"தென்றல்"** காற்றின் பெயரைச் சுமந்து வரும் உங்கள் சஞ்சிகை வாசகர்களுக்கு இதமான, உயிரோட்டமுள்ள சுவாசமாய்த் திகழும் என்றால் அது மிகையாகாது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் உங்கள் **"தென்றல்"** இன் சுவையை அனுபவிக்கத் துடிக்கிறேன். இன்றைய நவீன உலகில் சஞ்சிகை ஒன்று வெளியிடுவது என்பது ஒரு பாரிய சவால் மிகுந்த முயற்சியாகும். பல்வேறு சிரமத்தின் மத்தியில் வெளியிடும் தங்களையும், என் உயிர்த் **"தென்றல்"** ஐயும் வாழிய! வாழிய! வாழிய!!! என வாழ்த்துகிறேன்.

என்றும் உங்கள்

**– யாழ் ஊர் ராஸிக் –**

## நேர்மை, நாணயத்துக்குப் பாராட்டு!!!

தாங்கள் எனக்கு அனுப்பிய பரிசுப் பணம் கிடைத்தது. மிக்க நன்றி. சில மாத இதழ்கள் நேர்மை, நாணயமின்றி வெளிவரும் இந்தக் காலத்தில் தங்கள் காலாண்டு இதழின் நேர்மை, நாணயம் என்னை வியக்க வைத்தது.

மேலும் தங்கள் இதழ் மென்மேலும் சிறப்பாக வெளிவர உங்கள் இதழ் வாசகனின் அன்பு வாழ்த்துக்கள்!

உங்கள் வாசகன்

**ஞா.துரை**

85/4, கார்மல் வீதி,

குருநகர், யாழ்ப்பாணம்.

# இலக்கிய நயம்



## பூமாதேவி சீதையைத் தன்னுடன் சிம்மாசனத்தில் அமர வைத்தல்!!!

— கலாபூஷணம் முருகேசி தம்பிப்பிள்ளை —

ஒரு நாள் வயது முதிர்ந்த பிராமணர் தன் கரங்களில் இறந்த தன் மகனின் உடலைத் தூக்கிக் கொண்டு அயோத்தி மாநகருக்குப் பெரும் துயருடன் வந்தார். அவர் என் அருமை மகனே! பூர்வ ஜென்மத்தில் நான் எந்தப் பாவச் செயலும் செய்யவில்லையே! இன்று என் ஒரே மகனாகிய உன்னைப் பதினான்கு வயதில் இழந்து விட்டேனே! உன்னை இழந்த நானும், உன் தாயும் இனி உயிர் வாழ மாட்டோம். உன் பிரிவுத் துயரால் இறப்போம்.

இராம இராச்சியத்தில் பெற்றோருக்கு முன்பு பிள்ளைகள் இறப்ப தில்லை. இந்த மரணத்துக்கு இராமரின் தவறுதான் காரணம் என்றவன் **“அரசே! என் பிள்ளையை எனக்கு உயிரோடு கொடு! இல்லையென்றால், என் மனைவியும், நானும் உன் அரண்மனை வாசலிலே இறப்போம்”** என்றான்.

இப்பிராமணனின் பேச்சைக் கேட்ட இராமர் உடனே தன் ஆலோசனை கூறுபவர்களான மார்க்கண்டேயர், மெளதகலியார், கஸ்யார், கார்த்திகேயன், ஜாபாலி, கெளதமர், நாரதர் ஆகியோரை அழைத்து, ஆலோசனை கேட்டார்.

இவர்களில் நாரதர், **"அரசே, இக்குழந்தையின் மரணத்திற்கான காரணத்தை நான் கூறுகின்றேன். அதன் பின்னர் உனக்கு உசிதமானது எதுவோ அதனை நீ செய்"** எனக் கூறத் தொடங்கினார். ஹிருதா யுகத்தில் எல்லோரும் பிராமணர்களான தகுதி பெற்றிருந்தனர். பிராமணர்கள் தவம் புரிந்து, உலக வாழ்க்கையிலிருந்து முத்தியடைந்தார்கள். அந்தப் பொற்காலம் ஞானத்தின் ஆதிக்கத்திலிருந்தது. அக்காலம் அகால மரணம் கிடையாது.

அதன் பிறகு த்திரேதா யுகத்தில் ஷத்திரியர்கள், பிராமணர்களைப் போன்று தகுதி பெற்றிருந்தனர். அக்காலத்தில் நான்கு சமூகப் பிரிவுகள் ஏற்பட்டன. பிராமணர்கள் தவம் செய்யும் யோக்கியதையும் பெற்றிருந்தனர். துவாபர யுகத்தில் தருமமற்ற சூழ்நிலை தோன்றியது. அதனால் ஒழுக்கமற்ற விதிகள் விதிக்கப்பட்டன. வைசியர்களுக்கு தவம் செய்யும் சலுகை அளிக்கப்பட்டது. ஆனால் சூத்திரர்களுக்குத் தவம் செய்யும் சலுகை கடுமையாகத் தடை செய்யப்பட்டது. கலியுகத்தில் சூத்திரர்களுக்குத் தவம் செய்யும் சலுகை கொடுக்கப்பட்டது. இவ்வாறு கலியுகத்தில் பிராமணன், வைசியன், சத்திரியன் எனும் தகுதி இல்லாதிருந்தது.

**"இராமா! இந்தக் ஹிரேதா யுகத்தில் சூத்திரன் தவம் செய்வது மிகப் பெரிய தோசமாகும். இது இப்போது உன்னுடைய இராட்சியத்தில் ஒருவனால் வைராக்கியமாக நடை பெறுகிறது. ஒரு சூத்திரன் கடும் தவம் புரிந்து கொண்டி ருக்கிறான். இது தான் இந்தக் குழந்தையின் மரணத்திற்குக் காரணம்"** என்றார் நாரதர். இவ்வுரை கேட்ட இராமர் அயோத்தி மாநகரை தம்பி இலக்குமணன், பரதனிடம் ஒப்படைத்து விட்டு, புஸ்ப விமானத்தில் குற்றமிழைத்தவனைத் தேடிப் புறப்பட்டார். முதலில் கிழக்கு, வடக்கு, மேற்குத் திசைகளில் தேடினார். பின்னர் தெற்குத் திசை நோக்கிச் சென்ற போது, அங்கே ஓர் ஏரிக்கரையில் ஷைலவ மலையில் ஒருவன் தலைகீழாக நின்று கடுந்தவம் செய்வதை இராமர் கண்டார்.

இராமர் **"என்ன சிறந்த மாதவம்! என்ன திடமான தீர்மானம்!**

**என்று மனதிற்குள் நினைத்தவர், இந்த அச்சத்தைத் தரும் நீ யார்?"** - என அவனைக் கேட்டார். நீ என்னுடைய ஆவலைத் தூண்டி விட்டாய்? எதற்காக நீ இந்தக் கடுமையான உபத்திரவத்தை ஏற்றிருக்கிறாய்? உனக்குத் தேவலோகத்தை அடைய வேண்டுமென்ற எண்ணமா? அல்லது வேறு இலக்கா? நீ பிராமணனா? ஷத்திரியனா? வைஷியனா? சூத்திரனா? என்று கூறு என்று கேட்டு விட்டுத் தன்னை அவனுக்கு நான் தசரத மன்னனின் மைந்தன் இராமன் என்று அறிமுகப்படுத்தி அவனுக்கு உன் பதிலை நீ கூறு என்றார்.

அந்தத் தவசி தலைகீழாக நிற்கும் நிலையிலேயே **"நான் சூத்திரப் பெண்மணியின் வயிற்றிலே பிறந்தவன். இதனால்,நான் மன நிலையில் தளர்ச்சியடைந்தேன். நான் இவ்வாறு தவம் புரிந்து அடுத்த ஜென்மத்திலே தேவலோகத்தை அடைவேன் என்ற நம்பிக்கையில் இத்தவத்தைப் புரிகிறேன்"** – என் பெயர் சம்புகன் என்று அவன் இராமருக்குக் கூறினான்.

சம்புகன் இவ்வாறு கூறி முடிக்கு முன் இராமர் தன் வாளை உருவி அவன் தலையைத் துண்டித்தார். இது கண்டு தேவலோகத்தி லிருந்து தேவர்கள் **"சாந்தி சாந்தி"** என்று கூறி ஒலி செய்து, பூமழை பொழிந்தனர். எல்லையற்ற மகிழ்ச்சியடைந்த தேவர்கள் இராமபிரானின் முன் தோன்றினர். தேவர்கள் **"பிரபுவே! நீங்கள் எங்களுக்குப் பெரிய கருணை காட்டினீர்கள்! நீங்கள் இத்தன்மையான காரியத்தைச் செய்து, சாத்திரத்தைப் பாதுகாத்துள்ளீர்கள்"** என்றனர்.

இராமர் இந்திரனை நோக்கிக் கைகூப்பி **"தேவேந்திரா! அந்தப் பிராமணனின் உயிரைத் திரும்பவும் பெறும்படி செய்யவும். என் தவறினால் பிராமணனின் குழந்தை இறந்தது. அவனின் குழந்தையை உயிர்பெறச் செய்யுங்கள்"** என வேண்டினார் இராமர்.

இந்திரன் மகிழ்வுடன் **"பிரபு அக்குழந்தை சூத்திரனின் தலை துண்டிக்கப்பட்டவுடன், பிராமணனின் பிள்ளை உயிர் பெற்றுப் பெற்றோ ருடன் சேர்ந்து விட்டான்"** என்றார்.

அதன் பிறகு, இராமர் இராஜசூரிய யாகம் செய்ய ஆசை கொண்டார். அப்போது, பரதன் **"அண்ணா உலக அரசர்கள் தங்களைத் தந்தை போல**

**மதிக்கின்றனர். அதனால் அவர்கள் துன்பப்படக் கூடிய எக்காரியத்தையும் தாங்கள் செய்யக் கூடாது"** என்றான்.

இதற்கிடையில், வான்மீகி லவனையும், குகனையும் அழைத்து, **"நீங்கள் இராமரின் காதையை உலகெலாம் இசையுடன் பாட வேண்டும். பிராமணர்கள் வீடுகளில், ரிஷிகளின் ஆச்சிரமங்களில், அரசர்களின் அரண்மனைகளில் மட்டுமன்றி, நகர வீதிகளிலும், கிராமங்களிலும் பாடுங்கள்"** என்றார்.

லவனும், குகனும் அதை ஆமோதித்து, **"தாங்கள் பணியை செய்வோம்"** என்றனர். மறுநாள் லவனும், குகனும் வீணையைப் பக்க வாத்தியமாகக் கொண்டு, அயோத்தியின் இராச வீதிகளில் இராமாயண காவியத்தைப் பாடத் தொடங்கினர். இவர்களின் பாடல் இனிமையாகவும், கலைத்திறன் மிக்கதாகவும், கேட்போரை மெய்மறக்கச் செய்வதாகவும் காணப்பட்டது.

இராமரும் இவர்கள் பாடலை விருப்புடன் கேட்டார். அப்போது இராமர் இலக்குமணனை நோக்கி, **" இந்த முனிகுமாரர்களுக்கு 20000 பொற்காசுகள், விலையுயர்ந்த ஆடைகள், அவர்கள் விரும்பிக் கேட்கும் வெகுமதிகள் ஆகியவற்றை வழங்குங்கள்"** எனக் கூறினான்.

இதைக் கேட்ட வலனும், குகனும் பரிசில்களை வாங்க மறுத்தனர். இருவரும் ஒரே குரலில் **"சிறந்த முனிவரான எங்கள் குரு வான்மீகி உங்கள் சரித்திரம் முழுவதையும் கூறும் இந்தச் சிறந்த காவியத்தை இயற்றினார்"** என்று கூறினர். **"இந்தக் காவியங்கள் ஆறு பாகங்களை உடையன. ஆறாவது பாகம் உங்களுடைய இறுதியான சரித்திரமாகும். நீங்கள் இதைக் கேட்க விரும்பினால், உங்கள் யாகத்தில் பாடுவோம்"** என்றனர்.

இராமர் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் லவன், குகன் பாடும் இராமாயணக் காட்சிப் பாடல்களைக் கேட்டார். இந்த இரட்டையர்கள் சீதையினதும்-தனதும் குழந்தைகளாக இருப்பார்கள் என்ற முடிவுக்கு வந்தார். இதனால் இராமரது மனம் பாசத்தால் பொங்கியது. ஆழ்ந்து சிந்தித்த இராமர் சிறந்த தூதுவர்களை அழைத்து, வான்மீகியின் ஆச்சிரமத்திற்குச் சென்று, **"சீதை உண்மையில் நிந்திக்கப்படாதவளாயின் இங்குள்ள சபையோர் முன்னிலையில் நிரூபிக்குமாறு கூறுங்கள்"** அத்தோடு வான்மீகியின்

அனுமதியோடு சீதையை அழைத்துக் கொண்டு திரும்புமாறு உத்தர விட்டார்.

சீதை இராமரின் செய்தி கேட்டு முதலில் வர மறுத்தாள். பின்னர் மனதைத் தேற்றிக் கொண்டு, சிவப்புச் சீலையை உடுத்திக் கொண்டு வான்மீகியுடன் அயோத்திக்கு வந்தாள். தேவர்கள், பிரமா, ரிஷிகள், பொது மக்கள் சூழ சீதை இரு கைகளையும் கூப்பிக் கொண்டு பிரார்த்தனை செய்பவள் போல் நின்றாள்.

சீதையின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக, அவள் தன் உயிர்க் கணவனை மனதில் நிறுத்திக் கொண்டாள். அங்கு கூடியிருந்த மக்கள் முணுமுணுத்து எதையோ எதிர்பார்ப்பவர்களாக மௌனமாக இருந்தனர்.

அப்போது வான்மீகி தோன்றி **"தசரத மன்னனின் மைந்தனே! மக்களின் பயத்தினால் எவளை நீ துறந்தாயோ! நேர்மையும், குறைவற்ற நிறைவும் உடைய சீதை தன் கற்பின் மகத்துவத்தை பிரகடனம் செய்ய உம்முடைய உத்தரவைக் காத்திருக்கிறாள்"** என்றார்.

இராமர் சீதையைக் கூர்ந்து நோக்கினார். பின்பு அங்கு கூடியுள்ள சபையைப் பார்த்து, இதைத்தான் இங்கு கூடியுள்ள ரிஷிகளும் முன்பு கூறினர். அதனால் சீதையை அயோத்திக்கு அழைத்து வந்தேன். இப்படியிருந்தும் மக்கள் என்னைக் கேலி செய்கின்றனர். அதனாலேதான் நான் சீதையைத் துறந்தேன்.

அப்போது, சீதை அங்கே கூடியிருந்தவர்களுக்குக் கேட்குமாறு கூறினாள். **"பூமாதேவித் தாயே! என் விண்ணப்பத்தைக் கேளும். நான் என் திருமணத்திலிருந்து இராமரைத் தவிர மனதால் எவரையும் நினைக்க வில்லை. என் கணவரின் உள்ளத்தில் நான் வசித்தேன் என்பது உண்மை யானால் உன்னிடம் எனக்கு இடம் கொடு! ஏனென்றால், நான் இந்த வஞ்சகமுள்ள, தகுதியற்ற மக்கள் முன்னிலையில் நாணத்துடன் தலை குனிந்து நிற்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்காது"** என்று சீதை வாய்விட்டு அழுதாள்.

அப்போது பூமி இரண்டாக வெடித்துப் பிளந்தது. அதிலிருந்து

பூமாதேவி கம்பீரமாகத் தோன்றினாள். பூமாதேவி தன் மகளான சீதையைத் தன்னுடன் அணைத்துக் கொள்ளச் சித்தங் கொண்டு ஒரு தெய்வீகச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தாள். அப்போது பூமாதேவி சீதையைப் புன்முறுவலுடன் வரவேற்று, தன் கைகளால் தூக்கி தன் பக்கத்தில் அமர வைத்தாள். இதை தேவர்களும், பூலோகத்திலுள்ளவர்களும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில், அத்தெய்வீக சிம்மாசனம் பூமியினுள் இறங்கியது.

இதன் மூலமாக சீதையின் கற்பின் மகத்துவம் உலகறியச் செய்யப்பட்டது. இதைக் கண்ட தேவர்கள் வானிலிருந்து பூமாரி பொழிந்து மகிழ்ந்தனர்.


இராமர் தலை தாழ்த்திக் கொண்டவராக பூமாதேவியை நோக்கி, **என் சீதையை உடனே எனக்குக் கொடுத்து விடு. அல்லது நீ மறுபடியும் வெடித்து, என்னையும் என் சீதையையும் சேர்த்து விடு. இல்லையென்றால் நான் மலைகளை நொறுக்கி , காடுகளைத் துவம்சம் செய்து விடுவேன்"** எனக் கோபம் கொப்பளிக்கக் கூறினார்.

அப்போது பிரமா தோன்றி **"எல்லையற்ற போர்வீரனே! பிரபஞ்சத்தை ஆளும் பிரபுவே! உன்னுடைய தெய்வீகத் தன்மையை நான் என்னவென்று கூறுவேன். இராமா! துயரத்தை விட்டு, உன்னுடைய பிள்ளைகள் பாடும் இராமாயணத்தின் இறுதிப் பாகத்தைக் கேளு!"** என்றார்.

**"இந்த இதிகாசப் பாடல்கள் வான்மீகியால் இயற்றப்பட்டு, மூவுலகில் உம்முடைய புகழை இவ்வுலகம் உள்ளவரை நீடிக்கும்"** என்று கூறிப் பிரமா மறைந்தார். இராமர் தமது இரு புதல்வர்களையும் அழைத்துக் கொண்டு, வான்மீகியின் ஆச்சிரமத்தில் தங்கினார். சீதையை இழந்த துக்கத்தில் இரவைக் கழித்தார்.

தன் மனைவியை இழந்த இராமருக்கு வாழ்வு சூனியமாக விருந்தது. இராமர் தன் மனைவி சீதையின் உருவத்தைப் பொன்னால் வடித்து, அச் சிலையை வைத்திருந்தார். தன் மனதைத் தேற்றத் தன் மக்களை ரிஷிகள் சபையிலே உத்தர காண்டத்தைப் பாடச் செய்து, கேட்டுக் கொண்டிருந்தார்.

– க஌ுவாஞ்சியூர் அனோஜா பவளேந்திரன் –




வெற்றிலை என்பது
வெறும் பச்சைப் பொய் அல்லவா?
பொய்யாக பொருள் சொல்லி
போதனை நடத்தியது போதும்!

அன்றொரு நாள் அவர்
வெற்றிலை வியாபாரி போலும்
இது வெற்றிலை தானே என்றேன்.
ஆம் பிள்ள ஆம்
கட்டு 75 ரூபாய் என்றார்.
ஒன்றுமில்லாப் பண்டத்திற்கு
விலை ஏன்? என்றேன்.
அவ்வளவு தான்
போதனை ஆரம்பமாகியது!

ஜோதிடத்தில் - இந்த
வெற்றிலைக்கு முதலிடம்
உன் ஜோக நிலையைக்
கூறவல்லது வெற்றிலை!

பூஜைப் பொருளாய் வெற்றிலை.
புது மணவாழ்விற்கு
பத்திரிகையாய் வெற்றிலை
மெல்லும் உணவாய் வெற்றிலை.
மருத்துவ மூலிகையாய் வெற்றிலை.
மறக்க வேண்டாம்.
வெற்றிலையின் மகிமைமையை எனக்
கனிவான கண்டனமும் பிறப்பித்தார்!

இத்தகு வெற்றிலையினை
வெற்றிலை என்றது போதும்..
இனி....
"வெற்றி இலை" என்று
மங்கலமாய்
மகுடம் புனைவோம் வாரும்....!!



# கருகும் மொட்டுக்கள்

– ஆத்மராஜா றூத் சந்திரிக்கா, கோட்டைக்கல்லாறு –

"கோபியண்ணன் அதிர்ந்து போனான்.

திருமணம் நடந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் யாழ்ப்பாணத்திற்கு **"ட்ரான்ஸ்பர்"** வந்திருந்தது. சரியான அநியாயம். இறைவன் விட்ட வழி என்று எங்களுக்குச் சமாதானம் சொன்னாலும், உள்ளுக்குள் உதறலெடுத்து விட்டதென்பது எனக்குப் புரிந்தது.

**"நீயேதும் ஏடாகூடமாய் கதைத்திருப்பாய், தண்ணியில்லாத காட்டுக்குப் போட்டு, வாட்ட வேண்டுமெண்டு நினைச்சிருப்பாங்கள். எல்லாம் உன்ர வாய்க் கொழுப்பு".**

ஐயா இரைந்தார் உச்சஸ்தானியில், அண்ணை வெலவெலத்துப் போனான். **"சத்தியமாய் நானொருத்தருக்கும் ஒண்டும் பேசேல்ல ஐயா! என்ரை பாட்டுக்குக் கடமையைச் சரிவரச் செய்த நான். ஏனிப்படியொரு உசுப்பலோ தெரியேல்ல... என்ன செய்யுறது நான் போறன்".**

**"எங்கையடா...?"**

**"வேறயெங்க தெல்லிப்பளை மகாஜனாவுக்குத்தான். வேறயென்ன செய்யேலும்....?"**

**"மகாஜனா இப்ப மருதனார் மடத்திலையெல்லோ கொட்டில் பாடசாலையாக இயங்குது.."**

**"அங்க போய் வீணாய்ச் சாகப் போறியோ?"** ஐயா பதறினார். **"விதியெண்டால் மாற்றேலுமே... ஏன் செவ்வேளவையும் அங்க உயிரோடு சீவிக்குதுகள் தானே?"**

ஐயா மௌனித்தார். கோபியண்ணா மனுசியையும் கூட்டிக் கொண்டு,போய் விட்டார். வடமராட்சியில் அடிகிடியெண்டதுமே சர்வாங்கமும் பதறும். கோபியண்ணாவை நினைச்சி உதறும். அண்ணி கர்ப்பமாய் இருப்பதை அறிந்ததும், அம்மாவும்- ஐயாவும் ஆள்மாறியாள் கடிதமெழுதி, ஒரு படியாய் அண்ணியை எடுத்துப் போட்டினம்.அதுவும் ஏழாம் மாதத்தில்.. **"நல்ல வேளை இந்தப் பிரச்சினைக் காலத்தில் இஞ்சாலப் பக்கம் வந்து சேர்ந்தது"** – எனும் நிம்மதி எங்களுள்.

அண்ணி அளவளவாய் குழந்தைக்கான உடைகள் தைத்து அடுக்கி வைத்தாள். அறை முழுவதும் அழகழகான குழந்தைப் படங்கள் மாட்டிப் பூரித்தாள். பிறக்கப் போகும் குழந்தை பற்றி, குழந்தையின் இலட்சணம் பற்றி , எதிர்காலம் பற்றி நிறைய – நிறையக் கனவுகள் கண்டாள்.

கற்பனை உலகில் உலாவந்தாள். அண்ணி முகத்தில் தாய்மைப் பூரிப்பு வியாபித்திருந்தது. குழந்தை ஆணா? பெண்ணா? எனும் வாக்குவாதம். குழந்தைக்குப் பெயர் வைப்பது பற்றிய சர்ச்சை. குழந்தை அண்ணன் போல ஆறடியா... அண்ணி போல சிவப்பா... எனும் எதிர்பார்ப்புக்கள். அப்படியிப்படி ஏராளமான ஆவல்கள்..!

அண்ணிக்கு வலியெடுத்தது. பிரசவவலி...!

பிறந்ததொரு அழகான ஆண் குழந்தை இறந்தது.

விக்கித்தோம். விழிகசிந்தோம். அத்தனை கனவுகளும் ஒரு கணப்பொழுதில் கருகிக் கனலாகி விட்டது போல... ஒப்பற்ற ஓவியம்

தீயிலிட்டுச் சாம்பலானது போல.... கனவு இராட்சியம் சிதறிச் சிதைந்து கலைந்து போனது போல.... ஓர் உயிரோவியம் உயிர்ப்பிழுந்து கிடந்தது. தாயின் மனஅழுத்தங்களும், சூழலின் அதிர்வுகளுமே இக் குழந்தையின் இறப்புக்கான காரணம். மருத்துவர் யதார்த்தத்தை அனுசரித்துக் கருத்துச் சொன்னார். அண்ணி வலி தெளிந்து, அதிர்ச்சி வாங்கி, ஸ்தம்பித்துப், பின் உணர்வாகி குலுங்கிக் குலுங்கி அழுதாள். பத்து மாதங்கள் பட்ட ரணங்கள் அழுகையாய் வெளியேறியது. எத்தனை எதிர்பார்ப்புக்கள். எல்லாமே பொய்யாகிப் போயின. என்ன செய்வது?

கர்ப்பச் சூழலை விட்டுச் சுழன்ற பின்பு, வாழ்க்கைச் சூழல் போர்க்களமாவது தான் இயற்கை. தேசமே போர்க்களமாகியதால், உயிர்கள் பூமிக்கு வரப் பயப்படுகிறதா? எனும் வினா வந்து மனதில் மோதியது. மனம் கசிந்தது. அங்குமிங்கும் சிதறி ஓடும் அவலத்தால் எத்தனை உயிர்கள் கர்ப்ப அறையிலேயே கண்ணை மூடிக் கொள்கின்றன?

குருஷேத்திரமாய் மாறிய மண்ணில் பாதம் படுவதை விரும்பாத தளிர்கள், கர்ப்ப அறையிலேயே கல்லறை அமைத்துக் கொள்ள முயல்கின்றனவா..? எத்தனை? எத்தனை? எண்ணிலடங்கா அஸ்தமனங்கள்..!

அண்ணி சோர்வாய் இருந்தாள் ஒரு ஜென்மமே விரயமாகிவிட்ட பாவனையில். பட்ட வேதனையும், கவலையும் அப்பிக்கிடக்க, தாய்மையுணர்வு பஸ்மமாகி விட்ட தோரணையில் கோபியண்ணன் மௌனித்தான்.

**"அண்ணை"** பின்புறமாய் தோளில் கரம் பதித்த என்னை அண்ணார்ந்து பார்த்தான்.

என் விழித்திரை விலகிற்று. ஹிருதய ஓலம் பொங்கி வழிந்தது. என் விழிகள் வழியாக...,அழுகை பலவீனம் தான். இழப்பிலும் கூடவா? பல வேளைகளில் அழுகை வேதனையின் வடிகாலாகி இதய பாரத்தை வெளியேற்றி விடுகிறது. பாரம்பரியம் பேணிக் கொள்ள மண்ணில் படர்ந்து, தவழ்ந்து, செடியாகி, மரமாகி , விருட்சமாக வேண்டி தளிர் முறையிலே கருகிப் போன சோகம் அண்ணனை உலுக்கிப் விட்டது.

**"தலைவிதியைப் பறிகொடுத்த எங்கடை சனத்தின்ரை அவஸ்தைகளில் இது ஒரு சிறுதுளி".** என்றான் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு..., தன்னையும் தேற்றி , எங்களையும் தேற்றிக் கொள்வதற்குப் பிரயத்தனப் படுகிறான் என்பது வெளியானது. ஐந்து நாள் சோகம் முகத்தில் தேவதாஸ் கோலம் போட்டிருந்தது.

கசங்கிய சேட்டும், வாரப்படாத தலைமுடியும் அசல் விசரனாய் முத்திரை குத்தியது. ஆனால் வார்த்தைக் கோர்வைகளில் நிதானம் சக நியாயம் கலந்திருந்தது. யதார்த்த ஜீரணிப்புக்கள் அத்தியாவசியமென உணர்ந்தவன் போல விருட்டென எழுந்தான். முகம் கவலை தொலைத்துத் தெளிவாகியிருந்தது.

**"எத்தனை பேர் மலை- மலை போல இழப்புக்களைச் சந்திச்சிருக்கினம். அதுகளோட ஒப்பிடேக்க 'இது சிம்பிள்,வலு சிம்பிள்'** அண்ணியை ஆறுதல் படுத்தினான்.

அண்ணி ஆச்சரியமானாள்.... இதெப்படி? எப்படி முடிகிறது இவனால்?என்று விழியகல வினாவினாள்.

**"இறந்த காலத்தின்ரை இழப்புக்களை மறக்க வேணும். நிகழ் காலத்தின்ர நிதர்சனங்களை ஜீரணிக்க வேணும். எதிர்காலத்தின்ர நிகழ்வுகளுக்குத் தயாராக வேணும்".**

**"இதுதான் இன்றைய நியதி.... ம் எழும்புங்கோ... எழும்பிப் போய் முழுகிக் கொண்டு வாங்கோ"** ஐயாவை உசுப்பினான்.

அண்ணி மெதுவாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். **"எத்தனை எத்தனை தளிர்கள் கருகிப் போகின்றன..."** அண்ணி முகத்தில் அமைதி குடியமர்ந்தது. இனம்புரியாதோர் திருப்தி பளிச்சிட்டது. இழப்புச் சோகம் இருதய அடித்தளத்தில் சம்மணமிட்டுக் கண் மூடிக் கொண்டது. வேதனை ஜீரணமானது.

(நன்றி - வலி சுமந்த மானுடம் - 1995)

– கிண்ணியா ஏ.எம்.எம்.அலி–



# என்ன செய்வான்

சுட்டுப் பொசுக்கும் நெருப்பு வெயில்!
சுள்ளிக் காம்பாய் அவனுடலைப்
பட்டுப் பொசுக்க, அம்மனிதன்
பாவம்! உழைத்து மாய்கின்றான்!

நொந்து கெட்ட அவனுடம்பின்
நுங்கு போலும் தசையாவும்
வெந்து பட்ட தாலவனுக்கு
வெயிலும், நிழலும் ஒன்றேதான்!


நாளும் கொளுத்தும் வெயிற் சூட்டில்
நரம்பு தெறிக்கும் படியுழைத்தும்
கூழும் கூடச் சிலவேளை
குடிக்க இன்றிக் கிடக்கின்றான்!

கல்லை, மண்ணை அவன் சுமந்து
காலம் முழுதும் செத்தாலும்
"இல்லை" என்னும் நிலையே தான்
என்றும் வீட்டில் என் செய்வான்?

# 5 கேள்வி பதில்

**இல: -03-**

1. இலவசக் கல்வியின் தந்தை யார்?
2. விழுதுகள் உள்ள மரம் எது?
3. சாரணர் இயக்கத்தின் தந்தை யார்?
4. இலங்கையின் இறுதி இராசதானி எது?
5. பாம்பாட்டி ஊதும் இசைக்கருவி எது?



## விதிகள்:

01. இப் போட்டியில் சகலரும் பங்கு கொள்ளலாம்.
02. இப்போட்டியில் பங்குபற்றுவோர் கீழ் உள்ள கூப்பனில் விடைகளை எழுதி, நிரப்பி ஆவணி 15 ஆம் திகதிக்கு முன்னர் **"5 கேள்வி – 5 பதில்", "தென்றல்"** 44/1,பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
03. கூப்பன் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
04. வெற்றியாளர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
05. வெற்றிபெறுவோருக்கு முதல் பரிசாக 500/= வும், இரண்டாம் பரிசாக 300/=வும், மூன்றாம் பரிசாக 100/=வும் அனுப்பி வைக்கப்படும்.

**5 கேள்வி - பதில்**
**இல- 03 விடைகள்**

*1.*
*2.*
*3.*
*4.*
*5.*

பெயர் :- ........................................................................
முகவரி :- ........................................................................
........................................................................

# 5 கேள்வி பதில்

## இல: 02 விடைகள்

1. 247 எழுத்துக்கள்
2. மகாவலி கங்கை
3. கி.துரைராசசிங்கம்
4. 07 நிறங்கள்
5. 1948 இல்

## பரிசில் பெறுவோர்

### முதலாம் இடம்


**திருமதி. கீதாசினி தியாகரன்**
ஈச்சந்தீவு - கன்னன்குடா,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வவுணதீவு.

### இரண்டாம் இடம்

**வி. சுருதி**
44/18 கிருஷ்ணபுரம்,
கண்டி வீதி,
திருகோணமலை.

### மூன்றாம் இடம்

**த. வக்சலா**
திருமலை வீதி,
மட்டக்களப்பு.



## பாராட்டுப் பெறுவோர்

1. வ.கீதா - செங்கலடி.
2. ம.ரூபகலா - மண்டூர்.
3. ம.திருநாவுக்கரசு - வவுனியா.
4. வ.மதிரூபன் - அக்கரைப்பத்தனை.
5. உ.உதயநிலா - வந்தாறுமூலை.

# இது என்ன உலகங்கா!!!

நேரடி ரிப்போட்

– தர்மா –

**100** நாட்களைக் கடந்துவிட்ட நிலையிலும் மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு அருகாமையிலும், காரைதீவிலும், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்திலும் தமது ஆசாபாசங்களுக்கப்பால் அரச வேலைவாய்ப்பு கோரி வேலையற்ற பட்டதாரிகள் இரவு - பகலாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை அவ்வப்போது சந்திக்கும் அரசியல் வாதிகள் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கிச் சென்றாலும் அவை இதுவரை செயல் வடிவம் பெறவில்லை என வேலையற்ற பட்டதாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடும் வெயில்,நுளம்புக்கடி, வாகனப் புகை போன்ற அசௌகரியங்களைத் தாங்கிக் கொண்டுதமது இலட்சியம் நிறைவேற வேண்டுமென்ற நோக்கோடு தமது பிள்ளைகள், கைப்பிள்ளைகளை வீட்டில் விட்டுப் போராடிக் கொண்டிருக் கிறார்கள் வேலையற்ற பட்டதாரிகள்.

தமது கோரிக்கைகளுக்கு உறுதியான தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும், இதனைப் பெற்றுக் கொடுக்க மத்திய, மாகாண சபைகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்திய வண்ணம் உள்ளனர்.

# படமும் பதிவும்

திருமதி. கவிதா கிருபாகரன்





அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக வேந்தராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராசா அவரது ஊரான திருப்பழுகாமத்தில் மட்/மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை பிரதி அதிபர் க.மகாலிங்கசிவம் தலைமையில் 04.06.2017 அன்று பாராட்டிக் கௌவிக்கப்பட்டார். இந் நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வையும், வேந்தர் கல்விமான்கள், பொது மக்களால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.






மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகையம்மன் ஆலயத்தில் 09.06.2017 அன்று இடம்பெற்ற திருக்குளிர்த்தி வைபவத்தையும், கலந்து கொண்ட அடியார்களையும் படங்களில் காணலாம்.





மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம் 04.06.2017 அன்று இடம்பெற்றது. இங்கு கும்பாபிஷேகம் பிரதம குரு சிவஸ்ரீ நித்திய சிவானந்தசிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறுவதையும், கலந்து கொண்டஅடியார்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.






சுவாமி விபுலானந்தரின் 125 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபையால் மட்/மட்/ பிள்ளையாரடி நல்லையா வித்தியாலயம், மட்/மட்/ புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் மட்/மட்/ திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஆகியவற்றிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை மாநகர ஆணையாளர் வெ.தவராஜா வழங்கி வைப்பதையும், மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.




-கவிகரன்

## பெரியகல்லாறு மத்திய கல்லூரியை வீழ்த்தி
# கிண்ணத்தை சுவீகரித்தது மட்டு. இந்துக் கல்லூரி!!!



மட்/மட்/ இந்துக்கல்லூரிக்கும்- மட்/பட்/ பெரியகல்லாறு மத்திய கல்லூரி அணிகள் மோதிய 7 ஆவது எவரெஸ்ட் சிகரங்களின் கிரிக்கெட் சமர் 27.05.2017 அன்று பெரியகல்லாறு மத்திய கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் க.நல்லதம்பி தலைமையில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெரியகல்லாறு மத்திய கல்லூரி அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு இந்துக்கல்லூரி அணி 139 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சகல பெரியகல்லாறு மத்திய கல்லூரி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

போட்டியில் வெற்றியீட்டிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கான வெற்றிக் கிண்ணத்தை கிழக்கு மாகாண கல்வி , பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.தண்டாயுதபாணி அதிதிகளோடு இணைந்து வழங்கினார்.





ஓயாமல் நான் பாடும்
ஓராயிரம் பாடல்
உன் காதில் விழவில்லையா?-அன்பே
உனக்கென்மேல் மனமில்லையா?

தேயாத நிலவாக
தேனாக ஒளிவீசி
நீ வந்தால் அழகில்லையா?-பாடல்
நான் தந்தால் சுவையில்லையா?

மானாக நீ துள்ளி
மயிலாக நடமாடி
பாவாணன் நான் பார்க்கவா?-கவிதை
பலகோடி நான் பாடவா?

பாலாக நீ வந்து
பாய்வாயென் உள்ளத்தில்
என எண்ணி நான் வாழ்கிறேன்-கோடி
இன்பங்கள் அதில் காண்கிறேன்...!!!



# சருமத்தைப் பாதுகாப்பது சிறந்தது...!!!

சருமத்திற்கு எது நல்லது என்ற தேடல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. உடலில் உள்ள எந்த ஓர் உறுப்பைக் காட்டிலும், அதிக முக்கியத்துவம் தரும் உறுப்பு என்றால் அது சருமம் தான். இந்தப் பழத்தைச் சாப்பிட லாமா? அந்தக் கிரீமைப் பூசலாமா? என்று நாம் செய்யும் செயல்கள் அதிகம். நீர்ச்சத்து, ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்வது சருமத்துக்குப் பொலிவைத் தந்தாலும், சருமத்தைப் பாதிக்கும் விடயங்கள் சில உள்ளன. இவற்றைப் புறக்கணிக்காமல் உரிய சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலம் சருமம் பொலிவுடன் அழகாக இருக்கும்.

**அலர்ஜி**

சீரான சருமம் இல்லையெனில், உங்களின் சருமத்தில் என்ன பிரச்சினை? என்பதைக் கவனியுங்கள். பருக்கள், கருவளையம், எண்ணெய் வழிதல், வறண்ட சருமம், போன்ற அல்ஜிகள் இருப்பின் அவற்றை மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். சிலருக்குப் பருவக் கால நிலை மாற்றம் கூட, அல்ஜியை ஏற்படுத்தலாம். பூக்களின் மகரந்தம், தூசு, பறவைகளின் சிறகுகள் போன்றவற்றால் சிலருக்கு அலர்ஜி ஏற்படும். இதனால் கண்கள் சிவப்பாதல், நீர் வழிதல், கண்களின் கீழ் வீக்கம் போன்ற பாதிப்புகள் வரலாம். எதனால் பாதிப்புக்கள் ஏற்படுகிறது என்பதை முதலில் கண்டறிந்து அதனைத் தடுத்தல் வேண்டும். வெளியில் சென்றால் ஸ்கார்ஃப், மாஸ்க் போன்றவற்றை அணியலாம். வாரத்தில் இருமுறை படுக்கையின் பெட்ஷீட், தலையணை உறை, திரைச் சீலைகள் போன்றவற்றை மாற்ற வேண்டும்.

**தாமதமாகத் தூங்கும் பழக்கம்**

ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் இரவில் தாமதமாகத் தூங்கினால், பாதிப்புக்கள் பெரிதாக இருக்காது. ஆனால் தினமும் தாமதமாகத் தூங்கும் பழக்கம் இருந்தால்,தோல் சுருக்கம், அஜீரணக் கோளாறுகள் போன்றவை வரும். அடுத்த நாள் சருமத்தில் எந்தவிதப் புத்துணர்ச்சியும் இருக்காது. இரவில் 9-10 மணிக்குள் தூங்கச் செல்வது நல்லது.

- நந்தவனம் சந்திரசேகரன் -



# சிறுகதை வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு!!!

பழந்தமிழ்ப் பண்டிதர்கள் காலத்தில் அவர்கள் சிறுகதையை வரவேற்கவில்லை. சிறுகதையை இலக்கியம் என்று கூட அவர்கள் எண்ணு வதில்லை. சிறுகதை எழுதுவோரை அவர்கள் பரிகாசக் கண்ணோடுதான் பார்த்து வந்ததாக டாக்டர் மு.வெங்கடாஜலபதி தனது ஆய்வில் குறிப்பிடுகிறார்.

சிறுகதைகளை அலட்சியம் செய்து வந்த காலம் இன்று மலையேறி விட்டது. சிறுகதை இலக்கியம் இப்போது அமோக வளர்ச்சி பெற்றுள்ளது. பத்திரிகைகளில் சிறுகதைகள் முதன்மை பெற்ற சூழலையும் நாம் பார்த்திருக் கிறோம். பெரும்பாலும் மக்களின் மனப்போக்கை ஒட்டி வளர்வதே இலக்கியம் எனலாம். மக்களின் மனப்போக்கும், நடையுடையும் காலப் போக்கில் மாற்ற மடைந்து கொண்டே வருகிறது. எனவே இன்று வளர்ச்சியடைந்துள்ள சிறுகதை இலக்கியத்தை யாரும் அலட்சியப்படுத்த முடியாது.

சிறுகதை எழுதும் முறை என்பது நமக்கு முற்றிலும் புதிது. இது மேல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வடிவம். மேல் நாட்டு மொழிப் பயிற்சி நமக்கு கைவந்த பிறகு தான் சிறுகதைகள் எழுதக் கற்றுக் கொண்டோம் என்ற உண்மையையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிறுகதைகளைத் தனி இலக்கியமாக விளங்கும் வகையில் வளர்ந்தவர்களில் மேல்நாட்டினருக்குத் தான் நிறையப் பங்கு இருக்கிறது.

சிறுகதை என்பது ஒரு பக்கத்திலும் இருக்கலாம். ஐம்பது பக்கத்திலும் இருக்கலாம். நிகழ்வுகள் மட்டும் ஒன்றே ஒன்றாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் சிறு கதைக்குள் இலட்சியம் இருக்க வேண்டும். சொல்ல வந்த கருத்தைத் தெளிவாகப் புரியும்படி சொல்ல வேண்டும். சிறுகதைக்கும் - நாவலுக்கும் உள்ள வேறுபாட்டை புதுமைப்பித்தன் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சிறுகதை வாழ்க்கையின் சாரம் என்றால், நாவல் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடி. வாழ்க்கையின் சிக்கல்களை- அதன் உயர்வை - அதன் சிறுமைகளை, உலாவும் பாத்திரங்களை மனிதக் கூட்டத்தின் சலனத்தில் - அவற்றின் குணவிஸ்தாரத்துடன் சிருஷ்டிப்பது தான் நாவல். நாவலுக்குக் கால எல்லை கிடையாது.

**"சிறுகதை வாழ்க்கையின் ஒரு பகுதியை மற்றவற்றின் கலப்பை மறந்து, ஏன் விட்டு விட்டுக் கவனிக்கிறது"** - என்று சிறுகதை பற்றிப் புதுமைப்பித்தன் குறிப்பிடுகிறார். மேலும் கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவிப்பதற்கு ஒரு தூண்டுகோல். கதை முடிவடையும் போது, அதைப் பற்றிய சிந்தனை முடிவடைந்து விடாது. இப்படிப்பட்ட கதைகள் முடிவடைந்த பின்புதான் ஆரம்பமாகின்றன என்றும் குறிப்பிடுகிறார்.

சிறுகதை வளர்ச்சியின் வரலாற்றை உற்று நோக்கும் போது அதன் கால அளவை நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டம் என எடுத்துக் கொண்டால், 1900-1925 களில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத் திலேயே மேலைநாட்டு மரபை ஒட்டி சிறுகதை வளர்ச்சி தொடங்கி விட்டது. ஆங்கிலத்திலும், தமிழிலும் நாவல் படைத்து வந்த அ.மாதவையா 1910 ஆம் ஆண்டில் இந்து நாளிதழில் வாரம் ஒரு சிறுகதையாக 27 சிறு கதைகள் எழுதியிருக்கிறார். பின்பு அக்கதைகள் 1912 இல் **"Kusika's short stories"** என்ற பெயரில் இரண்டு தொகுதிகள் வெளிவந்தது. பின்பு பன்னிரண்டு வருடங்கள் கழிந்து 1924 இல் இக்கதைகளில் பதினாறை மாதவையாவே தமிழில் மொழி பெயர்த்து, **"குசிகர் குட்டிக் கதைகள்"** என்ற பெயரில் வெளியிட்டார்.

அதே காலகட்டத்தில் மகாகவி பாரதியாரும் பல சிறுகதைகளை எழுதியிருக்கிறார். நவதந்திரக் கதைகள், வேணுமுதலி சரித்திரம், மன்மதராணி, பூலோக ரம்பை, காந்தாமணி, ரயில்வேஸ்தானம் என்று பல கதைகளை எழுதியிருக்கிறார்.

1912களில் வ.வே.க ஐயர் கம்ப நிலையம் என்ற பதிப்பகத்தின் மூலம் மங்கையர்க்கரசியார் காதல் முதலிய கதைகள் என்ற ஐந்து கதைகள் அடங்கிய தொகுதியை வெளியிட்டார். மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன், கமல விஜயன், குளத்தங்கரை ஆலமரம் என்ற கதையே தமிழின் முதல்ச் சிறுகதையாக பல விமர்சகர்களால் காட்டப்படுகிறது.

வ.வே.க. ஐயர் இக்கதையின் பாத்திர ஒற்றுமை, நிகழ்ச்சி ஒருமை, உணர்வு ஒருமை என்ற மூன்றையும் சிறப்பாக ஆராய்ந்துள்ளதாக இலக்கிய விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

அவருடைய காலத்திற்குப் பிறகு, நாரண துரைக்கண்ணன், தி.க.ரங்கநாதன் போன்றவர்கள் சிறுகதைகளைப் படைத்துள்ளனர். இவர்கள் அனைவரும் தமிழ் சிறு கதைகளின் முன்னோடிகளாகப் போற்றப்படுகிறார்கள்.

இரண்டாம் காலகட்டம் என்று பார்த்தோமானால் 1926-1945 வரையிலான காலகட்டமேயாகும். தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் சிறப்பான காலகட்டம் என்று கூடச் சொல்லலாம். புதுமைப்பித்தன், கு.ப.ரா.ந.பிச்சமூர்த்தி , பி.எஸ்.ராமையா, மௌனி போன்றவர்களும் ராஜாஜி, கே.எல். வெங்கட்ரமணி சிட்டி சிங்காரம், லா.ச.ரா போன்றவர்களும் இக்காலகட்டத்தில் சிறுகதைகளை எழுதியுள்ளனர்.

இவர்கள் காலகட்டத்தில் கல்கி, நவசக்தி, விமோசனம், ஆனந்த விகடன் போன்ற இதழ்கள் சிறு கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்காலகட்டத்தில் தான் புதுமைப்பித்தனின் கதைகளின் வடிவம், உத்தி , உள்ளடக்கம் முறைகளில் பரிசோதனை முயற்சிகளாக அமைத்து இலக்கிய அந்தஸ்து பெற்ற சிறுக்கதைகளாகச் சிறந்தன. தமிழ் சிறுகதை முயற்சியை உலகத் தரத்துக்கு எடுத்துச் செல்ல முயன்றவர்களில் புதுமைப்பித்தன் முதன்மையானவர்.

மணிக்கொடி என்ற இலக்கியப் பத்திரிகையுடன் தொடர்பு ஏற்பட்ட பின்புதான் புதுமைப்பித்தன் மிகச் சிறந்த படைப்பு முயற்சிகளில் ஈடுபட்டார். மேலைநாட்டுச் சிறுகதை ஆசிரியர்களின் படைப்பாக்கத்தை நன்கு அறிந்த அவர் அவற்றை உள்வாங்கிக் கொண்டு தமது சொந்தப் படைப்பாளுமையைக் கொண்டு அற்புதமான படைப்புக்களைப் படைத்துள்ளார். இதற்கு நல்ல தளமாக அமைந்தது மணிக்கொடி என்ற சிற்றிதழ்தான். எனவே மணிக்கொடி

காலத்திலேயே சிறுகதை வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்களிப்பு தொடங்கிவிட்டது என்றே சொல்லலாம். அதைத் தொடர்ந்து சரஸ்வதி, தீபம் போன்ற இதழ்களும் சிறுகதைகளை வளர்த்தெடுத்துள்ளன.

சிறுகதை வளர்ச்சியின் மூன்றாம் காலகட்டம் எனப் பார்த்தால், 1946 இலிருந்து 1970 வரையிலானதாகும். இக்காலகட்டத்தில் தான் அதிகமானவர்கள் சிறுகதை எழுதத் தொடங்கினர். கரிச்சான் குஞ்சு, தி.ஜானகிராமன், வெங்கட்ராம், ரா.பாலகிருஷ்ணன், விந்தன், கு.அழகிரிசாமி, மு.சிதம்பரநாதன், அகிலன், நா.பார்த்தசாரதி போன்றவர்கள் சிறுகதைகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள்.

இதே காலகட்டத்தில் திராவிட இதழ்களின் வளர்ச்சியும் மேம்பட்டிருந்தது. திராவிட இதழ்களில் திராவிட இயக்கச் சொல்திரத்தோடு, பகுத்தறிவுப் பாதையில் கதை படைத்தவர்களுள் அண்ணா, மு.கருணாநிதி, ஆசைத்தம்பி, தென்னரசு, டி.கே.சீனிவாசன், தில்லை வில்லாளன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதே கால கட்டத்தில் ஜெயகாந்தன் எழுதிய சிறு கதைகளும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. முற்போக்கான கதைகளைப் படைத்த இவர் தொடக்கத்தில் சோதனை ரீதியாகவும் பின்னர் ஜனரஞ்சகமாகவும் கதைகள் படைத்துள்ளார்.

சிறுகதை வளர்ச்சியின் நான்காம் காலகட்டம் என்று பார்த்தால், 1976 இலிருந்து இன்று வரையில் மிகப் பெரிய பரிமாணங்களுடன் சிறுகதைகள் வளர்ச்சியடைந்துள்ளன. இக்காலகட்டத்தில் சா.கந்தசாமி, இந்திரா, பார்த்தசாரதி, ந.முத்துசாமி, அசோக மித்திரன், நீல.பத்மநாதன், வண்ணநிலவன், சுஜாதா, பாலகுமாரன், பிரபஞ்சன் போன்றவர்கள் பல சிறந்த சிறுகதைகளைத் தந்திருக்கின்றனர்.

நான்காம் காலகட்டத்திற்குப் பிறகுதான் சிற்றிதழ்களில் சிறுகதைகள் அபார வளர்ச்சியைப் பெற்றிருந்தன. வானம்பாடி காலத்திலிருந்தே சிற்றிதழ்கள் ஒரு இயக்கமாக இயங்கத் தொடங்கிவிட்டன. சிற்றிதழ்களின் இயக்கம் என்பது அடிப்படையில் வணிக கலாசாரத்திற்கெதிராக மக்கள் மத்தியில் ஆரோக்கியமான கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் இயக்கமாகத்தான் இயங்கியிருக்கின்றன. இன்று வரையில் அதே வழியில்தான் சிற்றிதழ் இயக்கங்கள் இயங்கி வருகின்றன.

இயக்கமாக இயங்கிய சிற்றிதழ்களில் சிறுகதை வளர்ச்சி மிகுந்த அக்கறை காட்டி வளர்ந்திருக்கின்றன. பல சிறந்த முத்திரைக் கதைகள் சிற்றிதழ்களில் தான் வெளிவந்திருக்கின்றன.

சிறுகதைகளை வளர்த்தெடுத்த இதழ்களின் பட்டியல் எனப் பார்த்தோமானால், கணையாளி, காலச்சுவடு, முங்காரி ,சுகன், உங்கள் பாரதி , செம்மலர், விசை, தீராநதி , பயணம் இவற்றோடு இனிய நந்தவனம், மகாகவி , முகம் என பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இன்றைய சூழலில் காட்சி ஊடகங்களின் வருகையால் வாசிப்புப் பழக்கம் சற்று குறைந்துள்ளதாகச் சொல்லப்பட்டாலும், பல சிறந்த சிறுகதைகள் சிற்றிதழ்களில் வெளியாகி வரவேற்பைப் பெற்று வருகின்றன என்பதையும் மறுக்க முடியாது.

சிற்றிதழ்களில் வெளியான கதைகள் சிறந்த கதைகளாகவும் பேசப்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க சிறுகதைகளை வெளியிட்ட பெருமை சிற்றிதழ்களுக்கே உண்டு. பல சோதனை முயற்சியான சிறுகதைகளை சிற்றிதழ்களே வெளியிட்டிருக்கின்றன. இனிவரும் காலங்களில் சிறுகதைகளின் வரலாறு எழுதப்படும் போது அதில் சிற்றிதழ்களின் பங்களிப்பு மிக அதிக அளவில் இருக்கும்.

ஒரு பக்கக் கதைகள், நிமிடக் கதைகள் என்று வணிக இதழ்களில் சிறுகதைகளின் வளர்ச்சி அருங்கிப் போய் விட்ட நிலையில் சிற்றிதழ்கள் மட்டுமே இன்று சிறுகதைகளை வளர்த்து வருகின்றன என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது.வருங்காலங்களிலும் சிற்றிதழ்கள் தான் சிறுகதை வளர்ச்சியில் அதிக முக்கியத்துவம் பெறும் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

**வாசகர்களே!**

2017ஆம் ஆண்டுக்கான சந்தாவைக் காலதாமதமின்றி அனுப்பி **"தென்றல்"** இன் தொடர் வருகைக்கு உதவுங்கள்.

# இலக்கியத்தில் இணைந்த நண்டு



-யசோதா பத்மநாதன், அவுஸ்திரேலியா-

நண்டுக்கும் - எனக்குமான முதல் அறிமுகம் கடற்கரையில் நிகழ்ந்தது. அப்போது நாமெல்லாம் 5 வயதுக்குட்பட்ட சிறுமிகள். கடற்கரை மணலில் இருக்கின்ற பொந்துகளுக்குள் ஓடி – ஒளியும் சின்னஞ்சிறு நண்டுகளை கலைத்துக் கலைத்து ஓடிப் பிடித்து விளையாடிய ஞாபகம்.

அதன் பிறகு **"எட்டுக்கால் ஊன்றி, இரு கால் படமெடுத்து, வட்டக் குடை பிடித்து வாறாராம் வன்னியனார்"** - அவர் யார்? என்று கேள்வி கேட்டு யாரோ பதில் சொல்ல, இரு புறத்தையும் மாறி - மாறிக் கண் விரியப் பார்த்த படி இருக்க, நண்டு அதற்குரிய தோற்றத்தோடு மனதில் இடம் கொண்டது.

பிறகு கொஞ்சம் வளர, **"வழி கோலிகள் பாலம் கட்டுகிறார்கள்"** என்றொரு பாடம் படித்த தமிழ்ப் புத்தகத்தில் இருந்தது. அதில் சில சிறுவர்கள் சேர்ந்து, நண்டு பிடிக்கக் கடலுக்குச் செல்வது போல, அந்தப் பாடம் அமைந்திருந்தது. அதனால் அது சாப்பிடச் சுவையானது என்பதும், ஐயோ! பாவம் என்றொரு பரிதாபமும் மனதில் மேலோங்கியது. அதன் உருவம் சற்றே வினோதமானது. தலையில்லாத கடினமான ஓடு. உள்ளே அதற்கு முற்றிலும் பொருத்த மில்லாமல், மென்மையான சதை. ஓட்டின் இரு ஓரத்திலும் 360 பாகையில் உருளும் கண்கள். ஆறு கால்கள். முன்னாலே இரண்டு கொடுக்கு. நேராகப் போகாமல் கரையால் நடப்பது அதன் தனித்துவப் பாணி . நீலம், வெள்ளை, பவளம், கறுப்பு நிறம் வரையானதாக இருக்கும். கடற்கரை வலைகளுக்குள்ளும், கடலுக்குள்ளும் அவைகளின் வாழ்வென அது ஒரு வினோத பிராணியாகத் தோன்றியது என் வளர் பருவத்தில். **"Cancer"** என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இவ்வுயிரினம் ராசியமைப்பில் விருச்சிக ராசிக்கு அடையாளமாகவும் காட்டப்படுகிறது. இந்த ராசியினால் சுட்டப்படும் மக்களும் வெளிப்படையாக கடினமானவர்களாகத் தோன்றினாலும், அவர்கள் மனம் நண்டின் உட்புறச்

சதைகள் போல மென்மையானதாகக் காணப்படும் - என்று சோதிடர்கள் இந்நண்டை உவமையாக்கிச் சொல்வதும், வர்ணிப்பதும் வழக்கம்.

இதன் கண்களைப் பற்றிச் சொன்னேன் அல்லவா? அதன் கண்களைச் சங்கத்துப் புலவர்கள் எப்படிப் பார்த்திருக்கிறார்கள் தெரியுமா? அவை நொச்சி அரும்பினைப் போல என்று கார் நாற்பது என்ற இலக்கியத்தில் கண்ணங் கூத்தனாருக்குப் பட்டிருக்கிறது. வீணையின் நுனிப் புறத்தில் நரம்புகளை முறுக்கேற்றுவதற்காக இருக்குமே சுற்றத் தக்கதான கட்டை. அது போலத் தோன்றி இருக்கின்றது பெரும் பாணாற்றுப் படைப் புலவருக்கு. அதன் பாடல் வரி இதுதான்.

**"அளை வாழ் அலவன் கண் கண்டன்ன**
**துளை வாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி"**
**(பெரும்பாணாற்றுப்படை – 10)**

நண்டுக்கு எட்டுக் கால்கள் இருந்தென்ன பயன்? அதற்கு நேராக நடக்கத் தெரியாதே! என்று சமூகத்தில் தமக்கெனத் தனித்துவமான பாதையை அமைத்துக் கொண்டவர்களைப் பற்றி சமூகம் நண்டை முன்வைத்து ஒரு விமர்சனம் முன் வைக்கும். முன்நோக்கிப் போகாமல் கரைப்புறமாக அது ஓடுவதைப் பார்ப்பதும், வெகு விநோதம் தான் அவுஸ்திரேலியாவில் ஆசிய நாட்டவர்களின் பெருக்கம் அதிகமாக இருப்பதாலோ என்னவோ இங்கு கடலுணவுகள் மகாபிரசித்தம். விநோதமான இந்தப் பிராணியை மீன் சந்தையில் அதன் கொடுக்கு இரண்டையும் சணல் கயிற்றினால் கட்டி, உயிரோடு விற்பனைக்கு வைத்திருப்பார்கள். சினையுள்ள நண்டு ஆண் நண்டு. பெண் நண்டு எவை? எவை? என்பது பற்றியும், பௌர்ணமி நாட்களில் பிடிக்கப்படும் நண்டு நல்லது இல்லை என்றும், அமாவாசை நாட்களில் பிடிபடும் நண்டுகள் நல்ல சதையுள்ள வையாக இருக்கும். இந்நிலையில் நண்டுகளைத் தூக்கிப் பார்த்தே அதன் சுவை, தரம் சொல்லத் தெரிந்தவர்கள் வியட்னாமியப் பெண்கள்.

நண்டு ஒரு வினோதமான பிராணி. தனித்துவ இயல்பு கொண்டது. அதனை எப்படியெல்லாம் இலக்கியமும், சமூகமும் பயன்படுத்தி யிருக்கிறது- பயன்படுத்திக் கொண்டிருக்கிறது என்று பார்த்தீர்களா? ஒவ்வொரு கவிஞருக்கும் ஒவ்வொரு விதமாகத் தோன்றியிருக்கிறது? உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது.....?

– பழுவூரான் –

# நீத்தார் நினைவு

## சமூகப் பணியாற்றிய மகோன்னத

## ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா!!!





கல்முனையைச் சேர்ந்த கல்வியாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.ஐ.எம். முஸ்தபா ஊடகத்துறைக்கப்பால், ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், சாரணர் இயக்கத்தின் மாவட்ட ஆணையாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர்.

இவர் ஊடகப் பணிக்காக கலாபூஷணம் விருது, சாரணிய ஜனாதிபதி விருது, உதைபந்தாட்டத்துக்கான தேசிய விருது, சமூக சேவைக்கான டக்டரிய விருது, சாமஸ்ரீ தேச சக்தி விருது, வை.எம்.ஏ.விருது, சாரணிய சர்வதேச விருது, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரம் வழங்கிய விருது எனப் பல்வகை விருதுகளை தன் திறமையால் பெற்ற உன்னத – மகத்தான பன்முக ஆளுமை எனக் கூறினால் அது மிகையாகாது.

1970 களில் உதைபந்தாட்டப் போட்டிகளில் சாதனை படைத்தவர். அது மட்டுமன்றி குறுந்தூர ஓட்ட வீரராகமெய்வல்லுனர் போட்டிகளில் பிரகாசித்தார்.

இவ்வாறாக கல்வி, இணைப்பாட விதானம், ஊடகத்துறை எனப் பல்வேறு துறைகள் ஊடாகச் சமூகத்துக்காகப் பெரும் பணியாற்றிய அமரர். எம்.ஐ.எம்.முஸ்தபாவுக்குத் **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



கல்வித் தென்றல் -தயாரிப்பு:- செல்வராணி ரீச்சர்-

# போது அறிவும் - விடைகளும்

01. மண்ணை வளமாக்க உதவுவது.
   ❖ மண்புழு.

02. விற்றமின் அதிகம் உள்ள உணவு.
   ❖ தக்காளி.

03. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த மிக உகந்த உணவு.
   ❖ கௌபி.

04. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி .
   ❖ பம்பரகந்த.

05. கொழும்பு முகத்துவாரக் கடலில் விழுவது.
   ❖ களனி கங்கை.

06. அபய வாவியைக் (பசவக்குளம்) கட்டுவித்த அரசன்.
   ❖ பண்டுகாபயன்.

07. தாவர இலைகளைப் பயன்படுத்திக் கூடுகளைச் செய்வது.
   ❖ முசுறு.

08. வத்தாளைக் கிழங்கில் அதிகம் உள்ள போசணைப் பொருள்.
   ❖ மாப்பொருள்.

09. கொள்ளை நோய் பரவுவது.
   ❖ எலியின் மூலம்.

10. தேசப்படத்தில் புகையிரதப் பாதைகள் காட்டப்படும் நியம நிறம்.
❖ கறுப்பு.

11. கலாவாவியைக் கட்டுவித்த அரசன்.
❖ தாதுசேனன்.

12. பட்டடை பயன்படுத்தப்படுவது.
❖ கொல்லன் கம்மாலையில்

13. இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட குளம்.
❖ பசவக்குளம்.

14. உப்புத் தூள் விரைவாகக் கரைவது.
❖ வெந்நீரில்.

15. ஆடையில் பட்ட தார்க் கறையை அகற்ற மிக உகந்தது.
❖ மண்ணெண்ணெய்.

16. நத்தை முட்டையின் நிறம்.
❖ மஞ்சள்.

17. எமது தேசிய விளையாட்டு.
❖ கரப்பந்தாட்டம்.

18. பூமிக்கு மிக அண்மையிலுள்ள கோள்.
❖ சுக்கிரன்.

19. நீருடன் நன்கு கலக்கக் கூடிய திரவம்.
❖ வினாகிரி.

20. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு.
❖ தெற்கே.

21. கண்டமாலை நோய்க்குப் பிரதான காரணம்.
❖ அயடீன் குறைபாடு.


22. சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுவது.
❖ வெண்புறா.


ஆரையம்பதியில்....
அழகிய 22 கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி
அபிராம் ஜீவல்ஸ்
பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329
AD/0008


அழகிய 22கரட் தங்கநகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட
வேண்டிய தங்கநகைகளின் சொர்க்காபுரி
சொர்ணம்
நகை
மாளிகை
AD/0040
16, புனிதஅந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152
212, 214 பிரதானவீதி, கல்முனை.
T.P: 0672229121/2229860
59, மட்டக்களப்புவீதி, கல்முனை.
T.P: 067 2220191


Ladshana Stamp
-Computer Rubber Stamp Maker-
Rubber Stamp
Plastic ID Card
Mug, Tile Print
Photo Frame
Certificate/Invitation
Name Board
# 39A, Baily Road, Arasady, Batticaloa.
Tel: 065 222 4048, 077 69 155 74.
e-mail: ladshana@gmail.com
AD/0024

# Headway
## School of Languages




**Headway School of Languages**
New Ancheneye Complex, Arasady, Batticaloa
T: 065 492 4042 | 065 222 5612 | 070 334 4445



வணசிங்கா பிரிண்டர்ஸ் 496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.